ஸ்ரீ வள்ளிமலைத் திருப்புகழ் ஸச்சிதாநந்த ஸ்வாமிகளின்
நூறாவது ஆண்டு ஜயந்தி விழா
வெளியீட்டு மலர் 4 பாகம் 1



திருப்புகழ் இன்னிசை பயிலும் பயில்வான்





அஞ்ஜல் அளித்தருளும் வள்ளிமலை அண்ணல்

உ
ஸ்ரீ வைஷ்ணவி துணை

ஸ்ரீ வள்ளிமலைத் திருப்புகழ் ஸச்சிதாநந்த ஸ்வாமிகளின் நூறுவது ஆண்டு ஜயந்தி விழா

வெளியீட்டு மலர் - 4 பாகம் - 1

(இதன் ஏழு இதழ்கள்)

1. திருப்புகழ்ப் பாராயணக் குண்டு
2. அநுஷ்டாநத் திருப்புகழ்
3. மெய்க்காவல் (வேல்மாறல்)
4. திருப்புகழ்க் கோபூஜை
5. திருப்புகழ் அர்ச்சனை
6. திருப்புகழ்த் தேவன் ஆற்றுப்படை
7. மநது - அறிவு தர்க்கம்

பாகம்-2

வள்ளி கல்யாணம்

தொகுப்பாசிரியர் :
வள்ளிமலைத் திருப்புகழ் ஸச்சிதாநந்த ஸ்வாமிகள்

தொகுத்து வெளியிடுவோர் :
ஸ்ரீ வள்ளிமலைத் திருப்புகழ் ஸச்சிதாநந்த ஸ்வாமிகளின்
நூறுவது ஆண்டு ஜயந்தி விழாக் குழுவினர்,
ஸ்ரீ வைஷ்ணவி ஆலயம்,
வடதிருமுல்லைவாயில், சென்னை-62.

 நவம்பர் 1970 விலை ரூ. 1-00

நவம்பர், 1970—2000.

இந் நூல் கிடைக்குமிடங்கள் :

1. *ஸ்ரீ ஸாது பார்த்தஸாரதி,*
ஸ்ரீ வைஷ்ணவி ஆலயம்,
வட திருமுல்லைவாயில்,
சென்னை-62.

2. *ஸ்ரீ ஸு. வே. ஸுப்ரம்மண்யன்;*
"ஸ்ரீ வைஷ்ணவி இல்லம்,"
மனை 36, 39-ஆவது தெரு,
நங்கைநல்லூர், சென்னை-61.

3. *ஸ்ரீ ஜி. வேம்பு,*
13, ஹநுமார் கோயில் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை-33.

4. *ஸ்ரீ T. S. ஸ்ரீநிவாஸையர்,*
உரிமையாளர் :
ஸ்ரீ லக்ஷ்மி விலாஸ் சிற்றுண்டிச் சாலை
சதுர அங்காடி, மேட்டூர் அணை-1.

5. Sri P. N. KRISHNARAJA,
Hotel Madras Boarding House,
6E, Connaught Place,
NEW DELHI-1.

கணம் பிரஸ், 7, மரைக்காயர் லப்பைத் தெரு, சென்னை-1

*மலர்-4 பாகம்—I

பொருளடக்கம்

ஸ்ரீ வைஷ்ணவி துணை

*முகவுரை

அருணகிரிநாதர் அருளிய திருப்புகழாதிய நூல்களிலிருந்
வள்ளிமலைத் திருப்புகழ் ஸ்வாமிகள் பல நூல்களைத் தொகு
தருளினர். அவை, (1) திருப்புகழ்ப் பாராயணத் தவநெறி
திருமுறை, (2) மார்கழித் திருப்புகழ்ப் பாராயணத் திருமுறை
(3) திருப்புகழ்ப் பாராயணக் குண்டு, (4) அநுஷ்டாநத் திருப்புக
(5) மெய்க்காவல் (வேல்மாறல்), (6) திருப்புகழ்க் கோ பூஜை
(7) மநது—அறிவு தர்க்கம், (8) வள்ளி கல்யாணம் என்பனவா
மேற்கண்டவற்றுள் 1, 5 எண்ணுள்ள நூல்கள், ஸ்வாமிகளாலே
அவரது ஜீவ்ய காலத்தில் வெளியிடப் பெற்றன. 3,4,6 எண்ணுள்
நூல்கள் ஸ்வாமிகளின் அநுக்ரஹத்துடன் அவரது அடியாராகி
திருப்புகழடிமை கா. ரா. முருகேசம் பிள்ளையவர்களால் ஸ்வா
களின் காலத்திலேயே வெளியிடப்பெற்றன. 2, 7, 8 எண்ணுள்
நூல்கள் இதுகாறும் அச்சேருமல் இருந்தன.

தவிர, ஸ்வாமிகள் வாழ்ந்த காலத்திலேயே தம் கருத்துக
வெளியிட்டிருந்தும் கூட, அவர் காலத்தில் வெளிவாராதிருந்
திருப்புகழ் அர்ச்சனை, திருப்புகழ்த்தேவன் ஆற்றுப்படை என்னு
இரு நூல்களும் திரு. கா. ரா. முருகேசம் பிள்ளையவர்களால் (ஸ்வா
கள் முன்பு கூறி அநுக்ரஹித்த வண்ணம்) பின்னர்த் தொகுக்க
பெற்று வெளியிடப் பெற்றன.

இதுகாறும் வெளிவந்த நூல்களை மறுபதிப்பு அச்சிட நினைந்
தோடு, வெளிவராதிருந்த மூன்று (எண் 2, 7, 8) நூல்களையும் அ
சிட்டு உலகுக் குதவ வேண்டுமென்று விரும்பினர் வள்ளிமலை
திருப்புகழ் ஸச்சிதாநந்த ஸ்வாமிகளின் 100 ஆவது ஆண்
ஜயந்தி விழாக் குழுவினர். அதன்படி, எல்லா நூல்களையு
விழா மலர்களாக அச்சிட்டு வந்த வகையில், மார்கழிப் பார
யணத் திருமுறை, மலர்—1 ஆகவும், திருப்புகழ்ப் பாராயண
தவநெறித் திருமுறை, மலர்—2 ஆகவும் அமைந்தன.

---

*இம் முகவுரையில் உடுக்குறியிட்ட பாக்கள் அருட்க
ஸாதுராம் ஸ்வாமிகளால் அருளப் பெற்றவை.

ஸ்வாமிகளது குருநாதரான ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளுடைய சரித்ரம்தமிழிலும், ஆங்கிலத்திலும் (அவருடைய 100ஆவது ஜயந்தி நாள் 28-1-70 இல் அமைந்ததை முன்னிட்டு மலர்—3 ஆக இவ் விழாக் குழுவினரால் வெளியிடப் பெற்றது.

ஸ்வாமிகளால் தொகுக்கப் பெற்று, அவர் காலத்திலேயே வெளி வந்தனவும், வெளிவராதனவும், அவரது அடியார்களால் ஸ்வாமிகள் காலத்திற்குப் பின், அவர் விருப்பப்படித் தொகுத்து வெளியிடப் பெற்றனவுமான எல்லா நூல்களும் இம் மலர்—4 இல் 8 இதழ்களாக இடம் பெற்றுள்ளன. அவற்றின் விபரம் வருமாறு:

இதழ்—1. திருப்புகழ்ப் பாராயணக் குண்டு

இரண்டாம் உலக மஹாயுத்தத்தின் போது ஜப்பான், ஜர்மனி ஆகிய பகை நாட்டினர் இந்தியா மீது குண்டுகள் வீசியதால் மக்கள் பீதியுற்றனர். மக்களின் பீதி தொலைய வேண்டி, ஸ்வாமிகள் இந் நூலைத் தொகுத்து, 1942 ஜநவரியில் வெளியிட்டனர். அந் நூலின் முகவுரையில், "இத் திருப்புகழ்ப் பாராயணக் குண்டு ஜர்மனி, ஜப்பான் குண்டுகளை அடக்கவல்ல பேராற்றல் வாய்ந்த எதிர் குண்டு. சூர ஸம்ஹார காலத்தும் முருகன் திருப்புகழ் வெற்றியே போர்க்களத்தில் முழங்கிற்று என்பது,

'கஜரத பதாதிகி அரக்கர் துணி பட்டுவிழு
களமுழுதும் வாழிய திருப்புகழ் முழக்குவன
கடிய குணத்த சினத்த ஸஹத்ர யோஜனை
நெடிய கழுத்த சுழித்த விழித்த பார்வைய
காத நூருயிர கோடி வளைந்தன
பூத வேதாளம் அநேக விதங்களே'

எனவரும் 'பூத வேதாள வகுப்'பால் ஏற்படுவதால், போர்க்களத்தும், மற்றும் எவ்விடத்தும் இறைவன் திருப்புகழை ஓதி எளிதில் ஜயம் பெறலாம். திட புத்தியுடன் நித்ய பாராயணம் செய்தால் இத் திருப்புகழ்க் குண்டின் ஆற்றலையும் ப்ரபாவத்தையும் அநுபவத்தில் காணலாம்" என்று ஸ்வாமிகள் கூறியுள்ளனர். யுத்த பயம் எப்போது ஏற்படினும் இந் நூலைப் பாராயணம் செய்தல் நல்லது. இந் நூலைப் பாராயணம் செய்வோர் எல்லாத் துன்பங்களினின்றும் விடுவிக்கப் பெற்றுக் காக்கப் படுவர்.

நூற்பயன் (அறுசீரடி ஆசிரிய விருத்தம்)

*திருத்தணிகைத் திருப்புகழ்மெய்த் திருவிழாத்
துவக்குதெய்வச் சேவை செய்த
விருத்தர்வள்ளி மலேஸ்வாமி அயல்நாட்டார்
நம்மவர்மேல் வீசுங் குண்டுய்
வருத்தமற வகுத்தருள்மந் திரக்கவச
மாகுமெதிர் வன்மைக் குண்டாம்
'திருப்புகழ்ப்பா ராயணக்குண்' டென்றுமுயிர்க்
குரியதுணை செய்தற் குண்டே.

இதழ்—2. அநுஷ்டாநத் திருப்புகழ்

இதனை 1944 ஜநவரியில், ஸ்வாமிகள் தொகுத்து முதன் முதலாக வெளியிட்டார்கள். திருப்புகழாதிய நூல்களிலிருந்து காலையில் படுக்கையை விட்டு எழுதல், நீராடல், திருநீறிடல், உணவுண்ணல், வழிநடை செல்லல், தனிவழி நடத்தல், தும்மல், நோய் நீக்கம் வேண்டல், இஷ்டகார்ய ஸித்தி வேண்டல், படுக்கைக்குச் செல்லல் முதலிய காலங்களில் ஓத வேண்டிய பாக்களையும், பா அடிகளையும் கொண்டது இந் நூல். இது அனைவராலும் தினந்தோறும் முறையாக ஓதி அநுஷ்டிக்கத் தக்கது.

நூற்பயன் (அறுசீரடி ஆசிரிய விருத்தம்)

*பாரதத்தில் தென்னாட்டின் வடநாட்டின்
பலபாங்கர்ப் பரிந்து சென்று
நீரதம்போல் அருணகிரி நாதர்கவித்
தேன்பொழிந்த நீர்மை வள்ளல்
சீரதனாற் பேர்நிறுத்தித் தொகுத்தருள்செய்
'அநுஷ்டாநத் திருப்புகழ்'கற்
றூரதனால் விழுப்பமுந்த வொழுக்கமதுற்
றமருலகத் தமர லாமே.

இதழ்—3. மெய்க்காவல் (வேல்மாறல்)

பஞ்சாக்ஷரம், ஷடக்ஷரம் போன்ற மந்த்ரங்களின் எழுத்துகளை வெவ்வேறு வகையான சக்ரங்களின் கட்டங்களுக்குள் அடைத்து அமைத்து அச் சக்ரங்களைப் பூஜித்தால் பெரும்பயன் கிட்டும்

...பது மந்த்ர சாஸ்த்ரம் புகட்டும் உண்மையாகும். இதனைப் ...பற்றியே ஸ்வாமிகள், அருணகிரிநாத ஸ்வாமிகள் பாடியருளிய ...ல் வகுப்பின் 16 அடிகளையும் முன்னும் பின்னுமாகவும் மேலும் ...மாகவும் மாற்றி மாற்றி அமைத்து 64 அடிகளாக்கி அதற்கு "...ல் மாறல்" என்று பெயர் தந்தார்கள்.

இதனைப் பாராயணம் செய்வதற்கு முன்னும் பின்னும் ஓத ...ண்டிய பாக்களையும் ஸ்வாமிகள் வகுத்துத் தந்துள்ளார்கள்.

"திருத்தணியில்......... வேலே" என்னும் வேல் வகுப்பின் ...டைசி அடி இந் நூற் பாராயணத்துள் 92 முறை ஓதப் பெறு ...கிறது. வேலாயுதம் நம்மைக் காப்பதற்கான ஒரு கவசம் ...ான்றது இது. மேலும், பேய், பில்லி, சூந்யம் போன்ற துன்பங் ...ளினின்றும் அன்பர்களைக் காக்கவல்லது என்பதோடு உடற் ...பிணியையே அன்றி உள்ளப் பிணியையும் போக்கவல்லது. தவிர ... ஒருமைப் பாட்டையும் பயக்க வல்லது என்பது,

"தேரா மநமும் திகைப்பொழிந்து—நேராக
ஓர் நிலையில் நின்றேநல் உண்மைப் பொருளுணர்ந்து
தேர் நிலையைக் காணச் சிறந்துதவும்—ஏர் நிலைகொள்
வேல்மாறல்" (ஸச்சிதாநந்தர் கலிவெண்பா)

...ன்னும் தணிகைமணியவர்கள் வாக்கால் விளங்கும்.

இந்த வேல்மாறல் என்னும் பகுதியுடன், தேவேந்த்ர ஸங்க ...குப்பும் இன்னும் சில பாடல்களும் சேர்க்கப் பெற்று ஸ்வாமி ...ாலேயே வெளியிடப்பெற்ற சிறு நூலே "மெய்க்-காவல்" ...ன்பதாகும்.

இந் நூல் நம் மெய்க்கு (உடலுக்கு)க் காவல் என்பதோடு நம் ...யிருக்கும் காவலாக அமைந்திருத்தலின் இது மெய்யான ...ண்மையான) காவலாகவும் உளது. இதனைப் பக்தியுடனும் ...ம்பிக்கையுடனும் பாராயணம் செய்வோர் எல்லா இடையூறு ...களினின்றும் விடுபட்டு இஹபர நலன்கள் எய்துதல் திண்ணம்.

'வேல் மாறல்' தனியாகப் பட உருவில் சிறிய அளவிலும் ("... X9" புகைப்பட நகல்), பெரிய அளவிலும் (18"X23½"— ...ித்தப் படம்) கிடைக்கும். இதற்குக் கண்ணாடியும் நாற்புறமும் ...ச் சட்டமும் அமைத்துப் பூஜிப்பதற்கு ஏற்றவாறு இப் படம் ...

முதன்முதலில் அன்பர்கள் ரூ. 3/- கொடுத்து இப் படத்தைப் பெற்றுக் கண்ணுடியிட்டுத் தினமும் தூப தீப, நிவேதனங்கள் முதலான உபசாரங்கள் செய்து பூஜித்து வர வேண்டும். 'மெய்க் காவல்' என்னும் நூலிலுள்ள பாடல்களைத் தினமும் பாராயணம் செய்துவரல் வேண்டும்.

ஆண்டுதோறும் திருத்தணிகையில் ஸபையினர் நடத்தும் திருப்புகழ்த் திருவிழாவிற் செய்யப் பெறும் அந்த தானச் செலவுக் கென ஒவ்வோராண்டும் உரிய காலத்தில் ரூ. 3/–ஐ அனுப்பிவைக்க வும் வேண்டும்.

இங்ஙனம் செய்வோர் திருப்புகழ் ஸ்வாமிகளின் ஆசிக்கும், முருகனின் முழுக்கருணைக்கும், வேலாயுதத்தின் மேலான அருளுக் கும் பாத்திரராகி எல்லா இஹபர நலன்களையும் எய்துவர் என்பதில் ஐயமில்லை.

நூற்பயன் [அறுசீரடி ஆசிரிய விருத்தம்]

*செய்க்காவல் செய்திருந்த சிறுமிவள்ளி
திருவடிசேர் சிந்தைச் செம்மல்
பொய்க்காவற் புலனடக்கி மநமொடுக்கும்
'வேல்மாறல்' பொருந்தச் சேர்த்து
'மெய்க்காவல்' எனத்தொகுத்து வெளியிட்ட
நூல்மநம்சொல் மெய்க்கும் மற்றும்
மெய்க்காவல் ஆகும்;வினைத் தீதகற்றும்
பொய்க்காமல் விண்டேன் மெய்யே.

இதழ்—4. திருப்புகழ்க் கோ பூஜை

பசுவானது, தாயாக, 'கோ மாதா' என இந்துக்களாற் போற்றப் பெறுகின்றது. எல்லாத் தேவர்களும் பசுவினிடத்தில் குடி கொண்டுள்ளனர் என்பது நம்மவர் நம்பிக்கை. ஓர் இல்லத் தின் மங்கலப் பொருள்களில் பசுவும் ஒன்று. அஃது ஒரு செல்வம். "வள்ளல் பெரும் பசுக்கள் நீங்காத செல்வம்" என்றனர் கோதை நாச்சியாரும். 'யாவர்க்கு மாம்பசு விற்கொரு வாயுறை' என்றார் திருமூலனாரும்.

இத்தகைய பெருமைகளையுடைய, தெய்வ ஸ்வரூபமான பசுக் களைத் தினமும் பூஜிப்பதில் பெருவிருப்பம் கொண்டவர் ஸ்வாமி கள் தினமும் மாலை வேளைகளில் பசுக்களைப் பணிப்பதற்கெனப்

பாடல்களைத் தொகுத்துத் 'திருப்புகழ்க் கோ பூஜை' (கோ–பசு) எனப் பெயரிட்டு ஒரு நூலை 1946 ஜனவரியில் முதன் முதல் வெளியிட்டார்கள். அவர்களே நூலில் உள்ளபடிப் பின்பற்றிப் பாடிக் கோ பூஜை செய்தும் வந்திருக்கிருர்கள். இதனைப் பலரும் கண்டு களித்துள்ளனர். தினமும் செய்ய இயலாவிடினும் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளிலாவது கோ பூஜை செய்தல் ஸகல மங்களங்களையும் தரும். (பக்கம் 27 இலும் பசுவின் பெருமை விளக்கப் பட்டுள்ளது.)

நூற்பயன் (அறுசீரடி ஆசிரிய விருத்தம்)

*கற்ருகா ராகாலி கனைக்காத்த
கோவலனும் கண்ணனைப்போல்
மற்ருரும் வியக்கநிரை பருவதரா
யன்குன்றில் வளர்த்துச் சோலை
சுற்ருரும் வள்ளிமலை ஆச்சிரமத்
திருந்தமஹான் தொகுத்துத் தந்த
முற்ருச்சீர்த் திருப்புகழ்க்கோ பூஜைமுறைப்
படித்தொழுதல் முழுதும் நன்றே.

இதழ்—5. திருப்புகழ் அர்ச்சனை

இறைவனுக்கு அர்ச்சனை என்னும் போது, அர்ச்சனைப் பதங்கள் 12, 16, 108, 300, 1000 என இருத்தல் மரபு. முருகப் பெருமானுக்கு ஓர் அர்ச்சனை திருப்புகழிலிருந்து தொகுக்கப் பெற வேண்டும் என்று ஸ்வாமிகள் நேரில் தெரிவித்த விருப்பத்திற்கிணங்கத், 'திருப்புகழடிமை' ஸ்ரீ கா. ரா. முருகேசம் பிள்ளை அவர்களால் (ஸ்ரீ வ. த. ஸு. பிள்ளையவர்கள் திருப்புகழ்ப் பதிப்பின் பாடல் எண் முறைப்படித்) தொகுக்கப் பெற்று 1961 இல் முதன் முதலாக வெளியிடப் பெற்றது இந் நூல்.

முதற் பதிப்பிலிருந்த வழுக்களை நீக்கித், திருத்தி, அருளிசை ஸ்ரீ S. V. ஸுப்ரம்மண்யம் அவர்களால் இவ் விரண்டாம் பதிப்பு செப்பனிடப் பெற்று அச்சிடப் பெற்றுள்ளது. முதற்பகுதியில் 108 'நமோ நம' தொடர்கள் உள்ளன.

இவ் விதழில் 'திருப்புகழ்ப் போற்றி (16)' என்னும் இரண்டாம் பகுதியும் இப்போது புதிதாகச் சேர்க்கப் பட்டுள்ளது.

அர்ச்சனையைத் தமிழில் செய்ய வேண்டும் என்ற கருத்துப் பரவிவரும் இந்நாளில் தமிழ்க்கடவுளாம் முருகவேள் வழிபாட்டுக்கு

அருணகிரியார் வாக்கின்படி அமைந்த தமிழர்ச்சனையான இந் நூலைப் பின்பற்றி அர்ச்சித்து அடியார்கள் முருகவேளின் முழுப் பேரருள் பெற முயல்வார்களாக.

நூற்பயன் (அறுசீரடி ஆசிரிய விருத்தம்)

* இருப்பவலாந் திருப்புகழைக் குருப்புகழ்கொண்
டொருப்படமற் றிசைத்தார் சொல்லத்
திருப்புகழால் தொகுத்தஅஷ்டோத் தரசதநா
மார்ச்சனையைத் திருப்பு கழ்ப்பாட்
டுருப்படியாய்த் தருபோற்றிச் சோடசநா
மார்ச்சனையை ஓது வார்க்கே
விருப்பமெலாம் நிறைவேறும்; கருப்பவமுந்
தணியும்;முக்தி வீடும் ஆமே.

இதழ்-6. திருப்புகழ்த் தேவன் ஆற்றுப்படை

முருகவேளுக்கு மகிழ்ச்சி யூட்டியதும், அருணகிரியாரராற் பாராட்டப் பெற்றதுமான நூல் நக்கீர தேவரின் திருமுருகாற்றுப் படையாகும். அந்த நறுங்கனியின் ரஸத்தைப் பிழிந்து, தணிகை மணி, டாக்டர் ஸ்ரீ வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்கள் திருப்புகழ் மூன்றும் பாகத்தில் தொகுத்து எழுதியிருந்த சுருக்க உரையினை ஸ்வாமிகள் விரும்பிப் படித்தனர். பின்னர் ஒரு நாள் வள்ளிமலை ஆச்ரமத்திற்கு வந்திருந்த 'திருப்புகழடிமை'யிடம் திருப்புகழி விருந்தும் திருமுருகாற்றுப் படைபோல் முருகப் பெருமானிடம் ஆற் றுப்படுத்துவதாக ஒரு நூல் இருக்க வேண்டும் என்று கூறி அதனை அமைக்க வேண்டிய முறைகளையும் சுருக்கமாகத் தெரிவித்தனர்.

அம் முறையின்படித் 'திருப்புகழடிமை'யவர்கள் இந் நூலைத் திருப்புகழ் 3 பாகங்களின் துணை கொண்டு தொகுத்து எழுதி 1965இல் முதன்முதலாக வெளியிட்டனர் அஃது, அருளிசையாரால் நன்கு விரிவாக்கப் பெற்று, இப்போது அச்சிடப் பெற்றுள்ளது.

திருமுருகாற்றுப் படையின் பொருட் போக்கில் அமைந்துள்ள இந் நூலிலிருந்து. அருணகிரிநாதரின் நூல்களில் அமைந்துள்ளபடி, ஆறு திருப்பதிகள், பஞ்சபூத ஸ்தலங்கள், பிற ஸ்தலங்கள், முருக னின் பொதுவான இருப்பிடங்கள் இவற்றை விளக்கும் அருணகிரி நாதரின் கம்பீர வாக்கு, அதிற் பொதிந்துள்ள சந்த அழகு

முதலியவற்றைப் படித்தறிந்து இன்புறலாம். இது திருப்புகழ் அடியார்களின் ஆன்மப் பசிக்கொரு திருவிருந்து.

நூற்பயன் (அறுசீரடி ஆசிரிய விருத்தம்)

* திருமுருகாற் றுப்படையாத் தறுமுகன்பால்
ஈடுபடச் செய்கீரர்போல்
அருணகிரி நாதரருள் அருந்தமிழ்நூற்
றுணைகொண்டே அமையும் வண்ணம்
கருணைநிறை திருப்புகழ்ஸச் சிதாநந்த
குருவருளாற் கட்டுரைத்த
மருவு'திருப் புகழ்த்தேவன் மானுற்றுப்
படை'பயில்வார் வாழ்வர் நீடே.

இதழ்-7. மநது — அறிவு தர்க்கம்

ஆன்ம நலம் பெறுதற் குகந்த மார்க்கம் உணராத மநமும், அதனை உணர்ந்திருக்கும் அறிவும் ஒன்றோடொன்று கலந்து பேசுங் கால், மநம் கேட்கும் வினாக்களுக்கு அறிவு விடை சொல்ல, அதன் பயனாய் மநம் இறைவனை நினைத்து வழிபடுவதில் ஈடுபாடு கொண்டு, இறுதியில் அறிவுடன் ஒன்று பட்டு இறைவனைப் போற்றும் நிலைமையை எய்துகின்றது.

தேஹப் பற்றும், சிற்றின்ப நுகர்ச்சியில் விருப்பமும் கொண்ட மநதுக்குக் கணபதியின் பெருமையையும், குருவருளின் இன்றியமையாமையையும், உலகச் சிற்றின்ப நாட்டத்தால் வரும் பல் வேறு துன்பங்களையும், திருப்புகழ்ப் பாக்களின் சிறப்பையும், ஞாநத்தின் உயர்வையும், ஞாந ஸுகத்தைப் பெறும் வழியையும் பல வகைகளில் அருணகிரியாரின் நூல்கள் வாயிலாக அறிவானது எடுத்துக் கூறி, மநதைத் தன் வழிக்குக் கொணர்ந்து, தானும் அதனுடன் சேர்ந்து முருகனை வழிபடுகிறது. வினா விடையாகத் தர்க்க ரூபத்தில் இந் நூல் அமைந்துள்ளது.

இது, ஸ்வாமிகளின் கருத்துக்கிணங்கப், ப்ரம்மஸ்ரீ R. கல்யாண ஸுந்தரம் ஐயரவர்களால் தொகுத்தெழுதப் பெற்றுப், பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகளாலும், நம் ஸ்வாமிகளாலும் பார்வையிடப் பெற்று, ஆசீர்வதிக்கப்பட்டது. இதுகாறும் அச்சிடப் பெருமலிருந்தது; அடியார்கள் பலர் எழுதி வைத்திருந்த ப்ரதிகளை ஒப்பு நோக்கிய அருளிசை மணியாரால் செப்பஞ் செய்யப் பெற்று, இப்பொழுது அச்சிடப்பெற்றுள்ளது.

இங்குக் காணப்பெறும் இரண்டாம் பகுதி ஸ்வாமிகளாலேயே தர்க்க வடிவில் பாடிப் ப்ரஸங்கம் செய்யப் பெற்ற ஒன்ருகும். 'திருப்புகழடிமை'யவர்களால் எழுதி வைக்கப் பெற்றிருந்த இது திருத்தப் பெற்று அச்சிடப்பட்டுள்ளது.

நாற்பயன் (அறுசீரடி ஆசிரிய விருத்தம்)

*திருப்புகழ்பா டடியவர்தம் திருவடிசேர்
சென்னியராம் செவ்வே ளன்பர்
பொருப்புளுயர் இருப்புவள்ளிப் பருப்பதம்வாழ்
தவமுநிவர் பூத லத்தே
இருப்பவர்தம் 'மநத்துக்கும் அறிவுக்கும்
தருக்க'மதா எடுத்துக் காட்டித்
திருப்புகழ்நூற் றுணைகொடுசெய் 'உரையாடல்'
இருவகையும் சிந்தைக் கின்பே.

பாகம்-II வள்ளி கல்யாணம்

வள்ளியை ஜீவாத்மாவாகவும், முருகனைப் பரமாத்மாவாகவும், வள்ளி தணிகேசனை மணத்தலேயே ஜீவ-ப்ரம்ம ஐக்யமாகவும் வைத்துத், 'திருப்புகழ் ஞாந ஸச்சிதாநந்த வல்லி சரிதம்' என்ற பெயரில் ஸ்வாமிகளால் 1935-க்கு முன்னமேயே நாடக வடிவில் எழுதப்பெற்றது இந் நூல். அருணகிரிநாதரின் நூல்களையே மிகுதியாக இதில் எடுத்தாண்டிருக்கிருர் ஸ்வாமிகள்.

பக்திக்கு முதலிடங் கொடுத்து, வள்ளியம்மையை முருகன்றன் முதலடியாராக்கிக், கந்த புராண மூலக் கதையையும் சில இடங்களில் மாற்றித், தன் கனவில் வள்ளி முருகனைக் காணல், காதல் கொள்ளல், நாரதர் நேரில் வந்து வள்ளியிடம் உரையாடல், வளையல் செட்டி வடிவெடுத்து முருகன் வள்ளியைச் சோதித்தல் வள்ளிக்கும் கிழவருக்கும் வாக்குவாதம், இரண்டாம் முறையும் அண்ணனை யானையாகக் கந்தவேள் வரவழைத்தல் முதலான செய்திகளைப் புகுத்தித், தினை, தினைப்புனம், கவண்கயிறு, கற்கள், பக்ஷிகள், ஆலோலப் பாட்டு, தேன், தினைமா இவற்ருேடு முருகவேள் வள்ளியிடம் செய்த லீலைகள் ஆகியவற்றிற்கெல்லாம் தத்வங்கள் கூறிக், கேட்போருக்கும் படிப்போருக்கும் பேரின்பத்தில் நாட்டத்தை உண்டாக்கி நவரஸம் ததும்புமாறு ஸ்வாமிகள் இதனை அமைத்திருக்கிருர்கள்.

இந்த ஒரு கதையையே 10 நாள்கள் சென்னைக் கச்சபேச் ...ர் கோயிலிலும், 16 நாள்கள் சென்னை மல்லிகேச்வரர் கோயி ...லும் ஸ்வாமிகள் சொல்லியிருக்கிறார்களாம்; ஸ்வாமிகள் ஜீவ்ய ...லம் முழுமையும் மிகுந்த ஈடுபாட்டுடன் ஸங்கீத உபந்யாஸமாக ...தனைச் செய்திருக்கிறார்கள்; பம்பாய், கல்கத்தா, சென்னை ...ரங்களிலும், தமிழ் நாட்டிற் பல இடங்களிலும் பல தடவைகள் ...ழ்த்தியிருக்கிறார்கள்; ஸமாதியாவதற்குச் சில நாள்கள் முன்பு ... ஸ்கந்த ஷஷ்டி ஆறு நாள்களிலும் வள்ளித் திருமணக் கால ...பம் செய்து ஆறும் நாள் வள்ளி கல்யாணத்தன்று குண்ட ...நி போதத்தை அடைந்தார்கள்.

இக் கதையை உரைக்க, ஸ்வாமிகள் கையாண்ட பாணி தனிப் ...ட ஒன்றாகும்.

பல அன்பர்களிடமிருந்தனவும், வேறுபாடுகள் கொண்டனவு ...ன பல ப்ரதிகளை ஒப்பு நோக்கி ஸ்வாமிகளிடமிருந்து வள்ளி ...ல்யாண காலக்ஷேபங்களிற் பின்பாட்டுப் பாடும் பேறுபெற்ற ...ருளிசைமணியார் செப்பஞ்செய் துதவ, இந் நூலினை அச்சாக்கி ...ள்ளனர் நூருவதாண்டு நூல்வெளியீட்டுக் குழுவினர்.

இந்த மலர் 4இன் எட்டாம் இதழான இந் நூல் மட்டும் இரண் ...ாவது பாகமாகத் தொடர்ந்து வெளியிடப்பெறும்.

நூற்பயன் (அறுசீரடி ஆசிரிய விருத்தம்)

* வள்ளிமலை தனிலுதித்து வளர்ந்துதணி
மலையிறைக்கே வாழ்க்கைப் பட்ட
'வள்ளிபத இதய'னெனும் திருநாம
வள்ளல்அவள் மணந்த காதை
எள்ளில்'திருப் புகழ்ஞாந ஸச்சிதா
நந்தவல்லி சரிதம்' என்னும்
'வள்ளிகல்யா ணம்'கதையா வழங்கிழுழக்
கியதையெண்ண வாய்க்கும் வாழ்வே.

இந்த மலர் 4இல் இடம் பெறும் இதழ்கள் 1, 2, 4 இம் ...ன்றையும் ஸ்வாமிகளின் ஜீவ்ய காலத்திலும், இதழ்கள் 5, 6 ...வற்றை அவர்தம் மறைவுக்குப் பின்னும் வெளியிட்டுப் பாது ...த்து வைத்திருந்தவர் திருப்புகழடிமையவர்கள். அவரே மநது ...றிவு தர்க்கம் (2) ஐயும் எழுதி வைத்திருந்தார்.

மநது—அறிவு தர்க்கம் (1)ஐ ஸ்வாமிகள் விருப்பப்படி எழு
வைத்திருந்தவர் ப்ரம்மஸ்ரீ R. கல்யாணஸுந்தரம் ஐயர் அவர்கள்.

மேற்சொன்ன இருவர்க்கும், வள்ளிகல்யாணக் கையெழுத்து ப்ரதிகளைக் கொடுத்துதவிய ஸ்ரீ R வைத்யநாதையர், ஸ்ரீ G. வேம் ஐயர், ஸ்ரீ S. பர்வதவர்த்தநி அம்மையார் ஆகியோர்களுக்கும் படியெடுத்தும், அச்சுப் பிழை திருத்தியுமுதவிய திருவாளர்கள் அருட்கவி ஸாதுராம் ஸ்வாமிகள், C. R. குப்புஸ்வாமிப் பிள்ளை S. V. ஸுப்ரம்மண்யம், S. S. சென்ருயனுர் ஆகியோர்க்கும், இ. நூலை அழகுற அச்சிட்டுக் கொடுத்த தனம் அச்சகத்தாருக்கு குருவருளும் குஹனருளும் குறைவின்றிப் பெருகுவதாக.

ஸ்ரீ வைஷ்ணவி ஆலயம்,
வடதிருமுல்லைவாயில்,
சென்னை-62.
17—11—'70.

இங்ஙனம்,
நூருவது ஆண்டு ஜயந்தி விழாக்
குழுவினரின் சார்பில்
ஸாது பார்த்தஸாரதி

வள்ளிமலைத் திருப்புகழ் ஸச்சிதாநந்த ஸ்வாமிகளின் நூருவது ஆண்டு ஜயந்தி விழா வெளியீடுகள் முதலியன

மலர் 4 பாகம் 2 'திருப்புகழ் ஞாந ஸச்சிதாநந்த வல்லி சரிதம்' என்னும் வள்ளி கல்யாணம் (உரைநடை)	(அச்சில்
மலர் 1 முதல் 4 வரை (ஒரே புத்தகமாக)	3.0
மலர் 5 வள்ளிமலை வள்ளல் (திருத்தப் பெற்ற இரண்டாம் பதிப்பு) (வள்ளிமலைத் திருப்புகழ் ஸ்வாமிகளின் திவ்ய சரிதம்)	5.0
மலர் 6 ஷண்முக ஷட் ஸஹஸ்ரநாமாவளி (ஆறு ஸஹஸ்ரநாமங்கள்) (தேவநாகரம் & தமிழ் எழுத்துகளில்)	(அச்சில்
மலர் 7 வேல் மயில் பூஜா விதி	0-2
மலர் 8 தேவேந்த்ர ஸங்க வகுப்புகள்	0.2
வேல்மாறல் பெரிய படம் (அச்சுப்படி)	3.0
,, சிறிய படம் (புகைப்பட நகல்)	3.0
வேல்மயில் செப்புத் தகடு (பூஜைக்குரியது)	3-0
,, மின்வண்ண அலுமினியத் தகடு (Anodised) பூஜைக்குரியது	2.0
வள்ளிமலைத் திருப்புகழ் ஸச்சிதாநந்த ஸ்வாமிகளின் மூவண்ணப் பட நாள்காட்டி (Calendar)	0-5
நூருவது ஆண்டு ஜயந்தி விழாச் சிறப்பு மலர்	5.0

மேற்கண்டவற்றை ஒரே ஸமயத்தில் ரூ. 25/- மதிப்புக்கு மேற்பட வாங் வோர்க்கு, வள்ளிமலை ஸ்வாமிகளின் மூவண்ணப் படக் காலண்டர் இனாமா கொடுக்கப்பெறும்.

கிடைக்குமிடம் :

ஸ்ரீ ஸாது பார்த்தஸாரதி, ஸ்ரீ வைஷ்ணவி ஆலயம்,
வட திருமுல்லைவாயில், சென்னை-62.

உ
கணபதி துணை
திருத்தணிகேசன் துணை

ஸ்ரீ வள்ளிமலைத் திருப்புகழ் ஸச்சிதாநந்த ஸ்வாமிகளின் 100-ஆவது ஜயந்தி விழா வெளியீட்டு மலர்—4

இதழ்—1

திருப்புகழ்ப் பாராயணக் குண்டு

கந்தரநுபூதி — கலிவிருத்தம்

ாட்டை] பாடும் பணிபெற [ஆதி

'ஆடும் பரிவேல் அணிசேவல்'எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்!
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனி யானை ஸஹோதரனே! (1)

ௗகளை] உயிர்க்கு ஆதரவு [ஜம்பை

தந்ததனத் தானதனத் தனதான

ம்பர்தருத் தேநுமணிக் கசிவாகி-
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி;
ன்பரஸத் தேபருகிப் பலகாலும்-
என்றன்உயிர்க் காதரவுற் றருள்வாயே;
ம்பிதனக் காகவநத் தணைவோனே-
தந்தைவலத் தால்அருள்கைக் கனியோனே;
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே-
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே. (2)

ாரங்கா] எழுந்தருள வேண்டுதல் [சுத்தாங்கம்

சென்றே இடங்கள் 'கந்தா!' எனும்பொ
செஞ்சேவல் கொண்டு வரவேணும்! (3)

கந்தரலங்காரம் — கட்டளைக் கலித்துறை

மாண்டு] கோள்கள் ஒடுங்க [சுத்தாங்க

நாள்என் செயும்வினை தான்என் செயும்எனை நாடிவந்த
கோள்என் செயும்கொடுங் கூற்றென் செயும்குமரேசர் இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் ஷண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே. (4

மாண்டு] திருப்புகழ் நெருப்பு [ஆ

தனத்தன தனத்தந் தனத்தன தனத்தந்
தனத்தன தனத்தந் தனதான

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்கும்
செகுத்தவர் உயிர்க்கும் சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் றறிவோம்யாம்
நினைத்ததும் அளிக்கும் மனத்தையும் உருக்கும்
நிசிக்கரு வறுக்கும் பிறவாமல்
நெருப்பையும் எரிக்கும் பொருப்பையும் இடிக்கும்
நிறைப்புகழ் உரைக்கும் செயல்தாராய்
தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந் தனபேரி
தடுட்டுடு டுடுட்டுண் டெனத்துடி முழக்கும்
தளத்துடன் நடக்கும் கொடுசூரர்
சினத்தையும் உடற்சங் கரித்தமலை முற்றும்
சிரித்தெரி கொளுத்தும் கதிர்வேலா
தினைக்கிரி குறப்பெண் தனத்தினில் சுகித்தெண்
திருத்தணி இருக்கும் பெருமாளே. (5)

கந்தரலங்காரம் — கட்டளைக் கலித்துறை

ஆநந்தபைரவி] தரிசநப் பாடல் [சுத்தாங்கம்

ஓலையும் தூதரும் கண்டுதிண் டாடல் ஒழித்தெனக்குக்
காலையும் மாலையும் முன்னிற்கு மே!கந்த வேள்மருங்கிற்
சேலையும் கட்டிய சீராவும் கையிற் சிவந்தசெச்சை
மாலையும் சேவற் பதாகையும் தோகையும் வாகையுமே. (6)

கந்தரலங்காரம் — கட்டளைக் கலித்துறை

...ண் முகப்ரியா] வேலும் மயிலும் துணை [சுத்தாங்கம்

...றிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
...றிக்குத் துணைமுரு காஎனும் நாமங்கள் முன்புசெய்த
...றிக்குத் துணைஅவன் பன்னிரு தோளும் பயந்ததனி
...றிக்குத் துணைவடி வேலும்செங் கோடன் மயூரமுமே. (7)

வேலின் ப்ரபாவங் கூறிப் பகைவரை வெல்ல

...ண் முகப்ரியா] *வேல்வகுப்பு [ஜம்பை

தனத்ததன தனத்ததன தனத்ததன தனத்ததன
தனத்ததன தனத்ததன தனத்ததன தானம்

...ருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை கறுத்தகுழல்
சிவத்தஇதழ் மறச்சிறுமி விழிக்குநிகர் ஆகும் -†திரு
...னைக்கைமுக படக்கரட மதத்தவள கஜக்கடவுள்
...தத்திடுநி களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் -திரு
...ழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு கவிப்புலவன்
இசைக்குருகி வரைக்குஹையை இடித்துவழி காணும் -திரு
...சித்தலகை முசித்தழுது முறைப்படுதல் ஒழித்தவுணர்
உரத்துதிர நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் -திரு

...ங்கராபரணம்]

...ரர்க்குமுநி வரர்க்கு(ம்) மக பதிக்கும்விதி தனக்கும்அரி
தனக்கும்நரர் தமக்கும்உறும் இடுக்கண்வினை சாடும் -திரு
...டர்ப்பரிதி ஒளிப்பநில வொழுக்குமதி ஒளிப்பஅலை
அடக்குதழல் ஒளிப்பஒளிர் ஒளிப்பிரபை வீசும் -திரு
...துதிக்கும்அடியவர்க்கொருவர் கெடுக்கஇடர் நினைக்கின்அவர்
குலத்தைமுதல் அறக்களையும் எனக்கொர்துணை ஆகும் -திரு
சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை அடுத்தபகை
அறுத்தெறிய உறுக்கிஎழு மறத்தைநிலை காணும்; -திரு

---

* இவ் வகுப்பின் தொடக்கத்திலும் முடிவிலும் 'திருத்தணி...யில்' எனத் துவங்கும் கடைசி அடியை 8 முறை ஓதுக.
† ஒவ்வோர் அடியின் முடிவிலும் ஒரு முறை மட்டும் ஓதுக.

அடாணு]

தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி தரித்தமுடி
படைத்தவிறல் படைத்தஇறை கழற்குநிகர் ஆகும் -தி(
தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண வழைப்பதென
மலர்க்கமல கரத்தின்முனை விதிர்க்கவளை வாகும் -தி(
தனித்துவழி நடக்கும்என திடத்தும்ஒரு வலத்தும்இரு
புறத்தும்அரு கடுத்திரவு பகற்றுணைய தாகும் -தி(
சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர் பெருத்தகுடர்
சிவத்ததொடை எனச்சிகையில் விருப்பமொடு சூடும்; -தி(

மோஹநம்]

திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது குடித்துடையும்
உடைப்படைய அடைத்துதிரம் நிறைத்துவிளை யாடும் -தி(
திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை முளைத்ததென
முகட்டின்இடை பறக்கஅற விசைத்ததிர ஓடும் -தி(
சினத்தவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு குறைத்தலைகள்
சிரித்தெயிறு கடித்துவிழி விழித்தலற மோதும் -தி(
திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன்மலை விருத்தன்என
துளத்தில்உறை கருத்தன்மயில் நடத்துகுஹன் வேலே-திரு(8

கந்தரலங்காரம் — கட்டளைக் கலித்துறை

அடாணு] வேல் துணை [சுத்தாங்க

தேரணி யிட்டுப் புரம்எரித் தான்மகன் செங்கையில்வேற்
கூரணி யிட்டணு வாகிக் க்ரவுஞ்சங் குலைந்தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த கடகம் நெளிந்ததுசூர்ப்
பேரணி கெட்டது தேவேந்த்ர லோகம் பிழைத்ததுவே. (9

அடாணா] வேல்வாங்கு வகுப்பு [ரூபகம்

தனதன தந்தன தனதன தந்தன தந்தன
தானந்தன தானந்தன

('வேல் வாங்கவே' என 64 முறை ஓதவும்)

பீடவிய நெஞ்சுடை அடியர் இடும்பை கெடும்படி
†தீயாம்குறை போய்ஆழ்ந்தது*
ஜெய ஜெய என்றிசை பரவிய †எங்கள் கொடுங்கலி
தேசாந்தர மேசாய்ந்தது *
†செயல்உரை நஞ்சுறழ் மயல்உறு நெஞ்சினர் வஞ்சகர்
தீமாநக்கதர் தாம்ஏங்கினர்*
சிகர தரங்கித மகர நெருங்கு †பெருங்கடல்
தீமூண்டுதன் வாய்மாண்டது*
தெரியலர் சென்றடை †திசைகளில் எண்கரி சிம்பெழ
மாரும்கிரி நூறும்தொளை*
சிகர நெடுங்கிரி குஹைகள் திறந்து திகந்தமும்
†லோகாந்தமும் நீர்தேங்கின*
†சிறையுள் அழுந்திய குறைகள் ஒழிந்து ஜெயங்கொடு
தேவேந்திரர் சேண்ஆண்டனர்*
†திரிபுவ நங்களும் ஒருபயம் இன்றி வளம்கெழு
சீர்பூண்டற நேர்பூண்டன;*
விடவச நம்சில பறையும் †விரிஞ்சன் விலங்கது
கால்பூண்டுதன் மேல்தீர்ந்தனன்*
விகஸித ஸுந்தர விதரண ஐந்தரு வெந்தெழில்
†வீவான்பொழில் பூவாய்ந்தது*

---

*இவ் வகுப்பில் இக் குறியிட்ட இடங்களில் மட்டும் 'வேல் வாங்கவே' என 4 தடவைகள் முதன் முறை பாடும் போது ஓதுக; முழு வகுப்பையும் பாடி முடித்து மறுமுறை மடக்குச் சொல்லும் போது 2 தடவைகள் 'வேல் வாங்கவே' என ஓதுக.

†இவ் வகுப்பை முதன் முறை முழுதும் பாடி முடித்து, இரண்டாம் முறை மடக்குச் சொல்லும் போது † இக் குறியிட்ட இடங்களிலிருந்து அவ் வடி முழுவதையும் சொல்லி இருமுறை 'வேல் வாங்கவே 'எனச் சொல்லிப் பாடி முடிப்பது வழக்கம்.

விழைவு தரும்பத †சசிதன் விளங்கிய மங்கல
நூல்வாங்குகி லாள்வாழ்ந்தனள்*
†வெருவி ஒதுங்கிமை யவர்எவ ரும்சிறை வென்றித
மேலாம்படி யேமீண்டனர்*
விழியொர் இரண்டொரு பதுசதம் நின்றெரி †கண்டகன்
மேல்வாங்கிளி கால்சாய்ந்தது*
வெளிமுழு தும்திசை முழுதும் விழுங்கி எழுங்கன
†சூர்மாண்டற வேர்மாய்ந்தது*
†விபுதர் பயம்கெட நிருதர் தளம்கெட விண்கெடு
மேடாம்படி பாடோங்கின*
மிடைகுறள் வெங்கொடி கழுகு பருந்து விருந்தென
ஊன்ஆர்ந்தகல் வான்ஆர்ந்தன*

காம்போதி]

அடவி படும்ஜடை மவுலியில் வெம்பணி அம்பணி
யாமாங்கதர் வாமாங்கதை
அநுபவை அம்பிகை அநுதிதை அம்பை த்ரியம்பகி
ஆசாம்பரை பாசாங்குசை
அநகை அசஞ்சலை அதிகுண ஸுந்தரி அந்தரி
காலாந்தகி மேலாம்திரு
அமலை அலங்க்ருதை அபிநய பங்குரை சங்கிநி
மாஞும்கணி ஞாநாங்குரை
அணிமுக பந்திகள் சிறுபொறி சிந்த விளைந்தழல்
வாய்கான்றிடு நாகாங்கதை
அபய வரம்புரி உபய கரம்திகழ் அந்தணி
யாமாங்கறி தாய்மாண்பினள்
அதுலை தருந்திரு மதலை *இடங்கொள் பயங்கொடு
பாய்மாண்கலை வாய்மாண்புன
அணிகுற மின்புணர் †தணிகையில் அந்தணன் இந்திர
ராஜாங்கம தாராய்ந்தவன்*
வடவை இடும்படி மணிமுடி பஞ்செழ விஞ்சிய
மாடாம்புடை நாடாண்டகை
வசைகரு தும்குரு பதியொடு தம்பிய ரும்பட
வேடாண்டவர் தேர்ஊர்ந்தவன்

வளவில் வளர்ந்திடை மகளிர் குவிந்து தடங்குடை
வார்பூந்துகில் வார்பூம்புயல்
வரைநிரை கன்றினம் முழுதும் மயங்கிய பண்கெழு
வேய்ஏந்திய வாயான் கழல்
மருதிடை சென்றுயர் சகடு தடிந்தடர் வெம்புலி
வாய்கீண்டொரு பேய்காய்ந்தவன்
மதசயி லம்பொர வரவிடு நெஞ்சினில் வஞ்சக
மாமான்பகை கோமான்திரு
மருகன்* நிரம்பிய மதிமுக மஞ்ஜரி குஞ்ஜரி
வாகாம்பரை தோய்காங்கெயன்*
†மகபதி தன்பதி பகைகிழி யும்படி அன்றடல்
வாள்ஓங்கிய வேல்வாங்கவே.* (10)
(மீண்டும் இங்கு 'வேல் வாங்கவே' என 64 முறை ஓதவும்)

ப்ரார்த்தனைப் பா அடிகள்

1. கொள்ளித் தலையில் எறும்பது போலக் குலையும்
என்றன் உள்ளத் துயரை ஒழித்தருளாய்.
2. அஞ்சா நெஞ்சாக்கம் தரவல பெருமாளே.
3. ஆபத்தில் அஞ்சல் என்ற பெருமாளே.
4. இடர் சங்கைகள் கலங்க அருள்வாயே.
5. ஒருகால் முருகா பரமா குமரா உயிர்கா எனஓ தருள்தாராய்.
6. நவர்வாட் டோமர சூலம் தரியாக் காதிய சூரும்
தணியாச் சாகரம் ஏழும் கிரிஏழும்-
சருகாக் காய்கதிர் வேலும் பொருகாற் சேவலும் நீலம்
தரிகூத் தாடிய மாவும் தினைகாவல்;
துவர்வாய்க் கானவர் மானும் ஸுரநாட் டாள்ஒரு தேனும்
துணையாத் தாழ்வற வாழும் பெரியோனே!

துணையாய்க் காவல் செய்வாய்!

7. வேலுமயிலும் நினைந்தவர் தந்துயர் தீர அருள்தரு கந்த!
8. பதினால்உல கத்தினில் உற்றுறு பக்தர்கள்
ஏது நினைத்ததும் மெத்த அளித்தருள் இளையோனே.
9. மொழியும் அடியார்கள் கோடி குறைகருதி னலும் வேறு
முனிய அறியாத தேவர் பெருமாளே.

10. வேண்டிய போதடியர் வேண்டிய போகமது
வேண்ட வெருதுதவு பெருமாளே

11. வேல்எடுத்த ஸமர்த்தை உரைப்பவர்
ஏவருக்கும் மனத்தில் நினைப்பவை அருள்வோனே

12. அடியவர் இச்சையில் எவைஎவை உற்றன
அவைதரு வித்தருள் பெருமாளே. (11

கந்தரநுபூதி—கட்டளைக் கலித்துறை

சங்கராபரணம்] நவக்ரஹ சேஷ்டை நீங்க [சுத்தாங்க

சேயவன் புந்தி வநவாஸ மாதுடன் சேர்ந்த செந்திற்
சேய!வன் புந்தி கல்நிசாச ராந்தக! சேந்த!என்னிற்
சேயவன் புந்தி பனிப்பாநு வெள்ளிபொன் செங்கதிரோன்
சேயவன் புந்தி தடுமாற வேதரும் சேதம்இன்றே. (12

கந்தரலங்காரம்—கட்டளைக் கலித்துறை

ப்யாக்] மயில் துணை [சுத்தாங்க

குசைநெகி ழாவெற்றி வேலோன் அவுணர் குடர்குழம்பக்
கசைஇடு வாசி விசைகொண்ட வாஹநப் பீலியின்கொத்
தசைபடு கால்பட் டசைந்தது மேரு அடியிடஎண்
திசைவரை தூள்பட்ட அத்தூளின் வாரி திடர்பட்டதே. (13

கந்தரலங்காரம்—கட்டளைக் கலித்துறை

காம்போதி] சேவல் துணை [சுத்தாங்க

படைபட்ட வேலவன் பால்வந்த வாகைப் பதாகைஎன்னுந்
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ளச் சலதிகிழிந்
துடைபட்ட தண்ட கடாகம் உதிர்ந்த துடுபடலம்
இடைபட்ட குன்றமும் மாமேரு வெற்பும் இடிபட்டவே. (14

கந்தரநுபூதி— கலிவிருத்தம்

மோஹநம்] மநக்கவலை நீங்க [ஆதி

எந்தா யும்எனக் கருள்தந் தையும்நீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே! உமையாள்
மைந்தா! குமரா! மறை நாயகனே.! (15

கந்தரலங்காரம்—கட்டளைக்கலித்துறை

...ணி] அச்சம் அற்ற வாழ்வுற [சுத்தாங்கம்

...ண ப்ரமாதம் நமக்கில்லை யாம்என்றும் வாய்த்ததுணை
...ணக் கலாபியும் வேலும்உண் டேகிண் கிணிமுகுள
...ண ப்ர தாப சசிதேவி மங்கல்ய தந்துரக்ஷா
...ண க்ருபாகர ஞாநா கரஸுர பாஸ்கரனே. (16)

கந்தரலங்காரம்—கட்டளைக்கலித்துறை

...] தாழ்வின்றி வாழ [சுத்தாங்கம்

...ந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
...ந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
...ந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாஹநனைச்
...ந்துணைப் போதும் மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே. (17)

கந்தரலங்காரம்—கட்டளைக்கலித்துறை

...] நாம விசேஷப் பலன் [சுத்தாங்கம்

...டியாத் *துயரக் கடலிற் புகார்; முழு துங்கெடுக்கும்
...டியாற் படியில் விதநப் படார்வெற்றி வேற்பெருமாள்
...டியார்க்கு நல்ல பெருமாள் அவுணர் குலமடங்கப்
...டியாக் கியபெரு மாள்திரு நாமம் புகல்பவரே. (18)

கந்தரலங்கார நூற்பயன்—கட்டளைக்கலித்துறை

...தாரகௌளம்] திடங் கூறுதல் [சுத்தாங்கம்

...ங்காணும் *ஜப்பான் வெடிக்குமஞ் சார்;*ஜர்மன் [சண்டைக்கஞ்சார்
...ங்கா நரகக் குழியணு கார்துஷ்ட நோய்அணுகார்
...ங்கார் புலிக்கும் கரடிக்கும் யானைக்கும் கந்தன்நன்னூல்
...லங்கார நூற்றுள் ஒருகவி தான்கற் றறிந்தவரே. (19)

*ஸமயோசிதமாக மாற்றப்பட்டன.

அபியுக்தர் பாட்டு—கட்டளைக்கலித்துறை

ப்யாகடை] திருப்புகழின் பெருமை [சுத்தாங்

மடங்கல் நடுங்கும் தணைச்சுடும் ஈதென்று *மாற்றலரும்
அடங்கி நடுங்குவர் சூலா யுதம்என் றஸுரர்கடல்
ஒடுங்கி நடுங்குவர் வேலா யுதம்என் றுரகனும்கீழ்க்
கிடங்கில் நடுங்கும் மயிலோன் திருப்புகழ் கேட்டளவே. (

ஆரபி] திருப்புகழின் ஆற்றல் [சுத்தாங்

வேலன் வாய்த்த திருப்புகழ் கற்றவர்
சீலம் ஏத்திய சித்தப்ர ஸித்தரே. (சித்து வகுப்பு) (

ஆரபி] [சுத்தாங்

கருப்புகழாம் பிறஸமயக் கதைகேளா தநுதினமுன்
திருப்புகழை உரைப்போர்க்குச் சித்திஎட்டும் எளிதாமே. (
—தணிகைக் கலம்ப

மோஹநம்] வாழ்த்து [சுத்தாங்

ஏகாந்த வீரம் போற்றி! நீலாங்க யாநம் போற்றி!
ஏடார்ந்த நீபம் போற்றி! முகில்தா
ஏரேுங்கல் ஏழும் சாய்த்த நான்மூன்று தோளும் போற்றி!
யார்வேண்டி னூலுங் கேட்ட பொருள்ஈய
த்யாகாங்க சீலம் போற்றி! (திருப். 1257) (

கந்தரலங்காரம்—கட்டளைக்கலித்துறை

மத்யமாவதி] திக் பந்தநம் [சுத்தாங்

தடக்கொற்ற வேள்மயி லே!இடர் தீரத் தனிவிடில்நீ
வடக்கிற் கிரிக்கப் புறத்தும்நின் ரேகையின் வட்டமிட்டுக்
கடற்கப் புறத்தும் கதிர்க்கப் புறத்தும் கநகசக்ரத்
திடர்க்கப் புறத்தும் திசைக்கப் புறத்தும் திரிகுவையே. (2

வேலும் மயிலும் துணை

(இதழ்—1—திருப்புகழ்ப் பாராயணக் குண்டு முற்றும்)

சுபம்

* ஸமயோசிதமாக மாற்றப்பட்டது.

உ

கணபதி துணை

திருத்தணிகேசன் துணை

இதழ்—2

அநுஷ்டானத் திருப்புகழ்

1. அதிகாலையில் நித்திரை கலைந்ததும் படுக்கையில் இருந்த பொழுது - முருகரைத் த்யாநித்து அவர் திருநாமங்களாகிய "முருகன்" "குமரன்" "குகன்" [அநுபூதி—15.] என்பனவற்றை பன்முறை ஓதி உருகி, *"காதல் உமை மைந்த" [திருப். 871] எனப் பணிந்து எழுந்திருக்கவும்.

2. பல் விளக்கி முகம் கழுவித் திருநீறு இடும்பொழுது "...ழுமலம்" "கற்பகவூர்" "செருத்தணி" [அந்தாதி—29] என்னும் ...த் தலங்களின் பெயரை ஓதி, †"ஆறுமுகம்" [திருப். 11.] என பன்முறை கூறி,

'நீற திட்டு நினைப்பவர் புத்தியில்
நேசம் மெத்த அளித்தருள் ஸற்குரு
நீலம் உற்ற திருத்தணி வெற்புறை பெருமாளே.

[திருப். 278.] என்று ஓத வேண்டும். திருநீறிடும் பொழுதெல்லாம் இங்ஙனம் ஓதுதல் நன்று.

3. தீர்த்தமாடும்பொழுது

"தீர்த்த எனதகம் ஏட்டை யுடன்நினை
ஏத்த அருளுடன் நோக்கி அருளுதி
தீர்த்த மலைநகர் காத்தசசிமகள் பெருமாளே" [திருப். 399]

என்று கூறித் தீர்த்தம் ஆடவும். குளித்த பிறகு மேற்சொன்னபடி திருநீற்று மந்திரங்களைச் சொல்லித் திருநீறு இட்டு இறைவன் முன்பு ...று.

---

* "காலையில் எழுந்துன் நாமமெ மொழிந்து
காதல் உமை மைந்த எனஓதி"—திருப்—871
"காலை எழுந்து தொழுவார் தங்கள் கவலை
களைவாய் கறைக்கண்டா"—சுந்தரர் "மேலைவிதியே"
திருமாலைப் பொலியச் 'சிவாய நம' என்று நீறணிந்தேன்"—அப்பர்
"கருவாய்க் கிடந்துன்"

"சிந்திக்கிலேன் நின்று ஸேவிக்கிலேன் தண்டைச் சிற்றடியை
வந்திக்கிலேன் ஒன்றும் வாழ்த்துகிலேன் மயில் வாஹநனைச்
சந்திக்கிலேன் பொய்யை நிந்திக்கிலேன் உண்மை சாதிக்கிலே
புந்திக் கிலேசமும் காயக் கிலேசமும் போக்குதற்கே." [அலங். 6

என்னும் ஆத்ம சுத்திப் பாடலை ஓதிப் பணியவும்.

4. எதை உண்ணும் பொழுதும் பருகும் பொழுதும் "பொருபிடியுங் களிறும் விளையாடும் புனச் சிறுமான் தருபி காவல ஷண்முகவா" [அலங். 57.] எனச் சாற்றி உண் வேண்டும்.

5. படுக்கும் பொழுது

"தவர்வாட் டோமர சூலம் தரியாக் காதிய சூரும்
தணியாச் சாகரம் ஏழும் கிரிஏழும்-
சருகாக் காய்கதிர் வேலும் பொருகாற் சேவலும் நீலம்
தரிகூத் தாடிய மாவும் திணைகாவல்;
துவர்வாய்க் கானவர் மானும் ஸுரநாட் டாள்ஒரு தேனும்
துணையாத் தாழ்வற வாழும் பெரியோனே-
துணையாய்க் காவல் செய்வாய்" [திருப். 681]
எனப் பாடித் துதித்து உறங்கவும்.

சாவேரி] 6. நோய்வரின் [ஆ

இருமல் உரோகம் முயலகன் வாதம்
எரிகுண நாசி விடமேநீர்-
இழிவு விடாத தலைவலி சோகை
எழுகள மாலை இவையோடே;
பெருவயி றீளை எரிகுலை சூலை
பெருவலி வேறும் உளநோய்கள்-
பிறவிகள் தோறும் எனைநலி யாத
படிஉன தாள்கள் அருள்வாயே;
வருமொரு கோடி அஸுரர் பதாதி
மடிய அநேக இசைபாடி-
வருமொரு கால வயிரவர் ஆட
வடிசுடர் வேலை விடுவோனே;

தருநிழல் மீதில் உறைமுகில் ஊர்தி
தருதிரு மாதின் மணவாளா—
ஜலமிடை பூவின் நடுவினில் வீறு
தணிமலை மேவு பெருமாளே.
[திருப். 260.] எனுந் திருப்புகழை முப்போதும் சொல்லித் திருநீறு அணிந்து கொள்க.

7. தும்மினும், இருமினும், கொட்டாவி அல்லது ஏப்பம்விடினும் "குமர சரணம்" [அந்தாதி 97] எனக் கூறவும்.

8. தனி வழி நடக்கும் பொழுது

"விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்ற
மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணைஅவன் பன்னிரு தோளும், பயந்ததனி
வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே"[அலங். 70.]

'தனித்துவழி நடக்கும்என திடத்தும்ஒரு வலத்தும் இரு
புறத்தும்அரு கடுத்திரவு பகற்றுணைய தாகும்
திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன்மலை விருத்தன்என
துளத்தில்உறை கருத்தன்மயில் நடத்து குஹன் வேலே"
[வேல் வகுப்பு.] எனச் சொல்லிக் கொண்டே வழி நடக்கவும்.

9. மனக்கலக்கம் வரும்போது: "ஆபத்தில் அஞ்சலென்ற பெருமாளே" [திருப். 1201.] "இதயந் தனில்இருந்து க்ருபையாகி இடர் சங்கைகள் கலங்க அருள்வாயே" [திருப். 233.] எனக் கூறி வணங்கிச் "சேயவன் புந்தி வனவாஸ மாதுடன் சேர்ந்த செந்திற் சேய!வன்பு உந்து இகல் நிசாச ராந்தக சேந்த" [அந்தாதி 48.] எனச் செபிக்கவும்.

10. பெரிய ஆபத்துகள் வரும்பொழுது

"அஞ்சா நெஞ்சாக்கம் தரவல பெருமாளே" [திருப். 678.] எனத் துதித்து


"நாள்என் செயும்வினை தான்என் செயும்எனை நாடிவந்த
கோள்என் செயும் கொடும் கூற்றென் செயும்கும ரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் ஷண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே"
[அலங். 38.] எனும் கோளறு பாடலை ஓதவும்.

11. பயணம் புறப்படும்பொழுது
மேற்சொன்ன கோளறு பாடலைச் சொல்லிப் புறப்படவும்.

12. நினைத்த காரியம் அநுகூலமாக: முருகரை வேண்டும் பொழுது-"நினைத்த காரியம் அநுகூலமே புரி பெருமாளே" [திருப். 432] "மொழியுமடியார்கள் கோடி குறை கருதினலும் வேறு முனிய அறியாத தேவர் பெருமாளே" [திருப். 828], "வேண்டியபோது அடியர் வேண்டிய போகமது வேண்ட வெருதுதவு பெருமாளே" [திருப். 246.], "அடியவர் இச்சையில் எவை எவை உற்றன அவை தருவித்தருள் பெருமாளே" [திருப். 727.], "யார் வேண்டினுலுங் கேட்ட பொருள் ஈயும் த்யாகாங்க சீலம் போற்றி" [திருப். 1257.] என்று கூறிப் பணிந்து துதிக்கவும்.

(இதழ் —2 — அநுஷ்டானத் திருப்புகழ் முற்றும்)

சுபம்! சுபம்!! சுபம்!!!



[திருப்-திருப்புகழ். அலங்-கந்தரலங்காரம். அந்தாதி-கந்தரந்தாதி. மேற்குறித்த எண்கள் ஸ்ரீமான் வ. த. சுப்ரமண்யப் பிள்ளை அவர்கள் வெளியிட்டிருக்கும் திருப்புகழ் 3 பாகங்களிலுள்ள எண்கள்.]

கணபதி துணை
திருத்தணிகேசன் துணை

இதழ்—3

மெய்க்காவல் (வேல்மாறல்)

(வேலும் மயிலும் நினைந்தவர் தந்துயர்
தீர அருள் தரு கந்த நின்—அருள் தாராய்

ஹம்ஸத்வநி] அருள் பெற [கண்டத்ரிபுடை

..ம்பர் தருத் தேநுமணிக் கசிவாகி-
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி-
இன்பரஸத் தேபருகிப் பலகாலும்;
என்றன்உயிர்க் காதரவுற் றருள்வாயே;
தம்பிதனக் காகவநத் தணைவோனே-
தந்தைவலத் தால்அருள்கைக் கனியோனே;
.அன்பர் தமக் கானநிலைப் பொருளோனே-
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

.ஆரபி] யமன் வரும்போது நம் துயர்கெட முருகன் வர [ஆதி

இசைந்த ஏறும் கரிஉரி போர்வையும் எழில்நீறும்-
இலங்கு நூலும் புலிஅதள் ஆடையும் மழுமானும்;
.அசைந்த தோடும் சிரமணி மாலையும் முடிமீதே-
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா;
..சந்த சூரன் கிளையுடன் வேர்அற முனிவோனே-
உகந்த பாசம் கயிறொடு தூதுவர் நலியாதே;
.அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்-
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

சங்கராபரணம்] தரிசநப் பாடல் [சுத்தாங்கம்

..லையும் தூதரும் கண்டுதிண் டாடல் ஒழித்தெனக்குக்
கா லையும் மாலையும் முன்னிற்கு மேகந்த வேள்மருங்கிற்
..சலையும் கட்டிய சீராவும் கையிற் சிவந்தசெச்சை
..லையும் சேவற் பதாகையும் தோகையும் வாகையுமே.

ஷண்முகப்ரியா] வேலும் மயிலுந் துணை [சுத்தாங்கம்

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காஎனும் நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணைஅவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலும்செங் கோடன் மயூரமுமே.

வேலும் மயிலுந் துணை

*வேல்மாறல்

திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன்மலை விருத்தன் என
துளத்தில்உறை கருத்தன்மயில் நடத்துகுஹன் வேலே
(இதையே பன்னிருமுறை சொல்லவும்)
பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை கறுத்தகுழல்
சிவத்தஇதழ் மறச்சிறுமி விழிக்குநிகர் ஆகும் -†திரு
திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன்மலை விருத்தன்என
துளத்தில்உறை கருத்தன்மயில் நடத்துகுஹன் வேலே -திரு
சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை அடுத்தபகை
அறுத்தெறிய உறுக்கிஎழு மறத்தைநிலை காணும் -திரு
தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி தரித்தமுடி
படைத்தவிறல் படைத்தஇறை கழற்குநிகர் ஆகும் -திரு
பனைக்கைமுக படக்கரட மதத்தவள கஜக்கடவுள்
பதத்திடுநி களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் -திரு
சினத்தவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு குறைத்தலைகள்
சிரித்தெயிறு கடித்துவிழி விழித்தலற மோதும் -திரு
துதிக்கும்அடி யவர்க்கொருவர் கெடுக்கஇடர் நினைக்கின்அவர்
குலத்தைமுதல் அறக்களையும் எனக்கொர்துணை ஆகும் -திரு
8. தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண வழைப்பதென
மலர்க்கமல கரத்தின்முனை விதிர்க்கவளை வாகும் -திரு

---

* இது தனியே கண்ணாடி போட்டு மாட்டிப் பூஜை செய்யும் அளவுக்குப் பெரிய அளவிலும், சிறிய அளவிலும் அச்சிடப் பட்டுளது. விலை ரூபாய் மூன்று. மேலும் விபரங்களுக்கு முகவுரையைப் பார்க்க.

† 'திரு' என உள்ள இடங்களில் 'திருத்தணியில்' எனத் தொடங்கும் அடி முழுவதையும் ஒருமுறை ஓதவும்.

பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு கவிப்புலவன்
இசைக்குருகி வரைக்குஹையை இடித்துவழி காணும் –திரு
திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை முளைத்ததென
முகட்டின்இடை பறக்கஅற விசைத்ததிர ஓடும் –திரு
சுடர்ப்பரிதி ஒளிப்பநில வொழுக்குமதி ஒளிப்பஅலை
அடக்குதழல் ஒளிப்பஒளிர் ஒளிப்பிரபை வீசும் –திரு
தனித்துவழி நடக்கும்என திடத்தும்ஒரு வலத்தும்இரு
புறத்தும்அரு கடுத்திரவு பகற்றுணைய தாகும் –திரு
பசித்தலகை முசித்தழுது முறைப்படுதல் ஒழித்தவுணர்
உரத்துதிர நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் –திரு
திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது குடித்துடையும்
உடைப்படைய அடைத்துதிரம் நிறைத்துவிளை யாடும் –திரு
சுரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்)மக பதிக்கும்விதி தனக்கும்அரி
தனக்கும்நரர் தமக்கும்உறும் இடுக்கண்வினை சாடும் –திரு
16. சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர் பெருத்தகுடர்
சிவத்ததொடை எனச்சிகையில் விருப்பமொடு சூடும் –திரு
சுரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்)மக பதிக்கும்விதி தனக்கும்அரி
தனக்கும்நரர் தமக்கும்உறும் இடுக்கண்வினை சாடும் –திரு
சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர் பெருத்தகுடர்
சிவத்ததொடை எனச்சிகையில் விருப்பமொடு சூடும் –திரு
பசித்தலகை முசித்தழுது முறைப்படுதல் ஒழித்தவுணர்
உரத்துதிர நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் –திரு
திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது குடித்துடையும்
உடைப்படைய அடைத்துதிரம் நிறைத்துவிளை யாடும் –திரு
சுடர்ப்பரிதி ஒளிப்பநில வொழுக்குமதி ஒளிப்பஅலை
அடக்குதழல் ஒளிப்பஒளிர் ஒளிப்பிரபை வீசும் –திரு
தனித்துவழி நடக்கும்என திடத்தும்ஒரு வலத்தும்இரு
புறத்தும்அரு கடுத்திரவு பகற்றுணைய தாகும் –திரு
பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு கவிப்புலவன்
இசைக்குருகி வரைக்குகையை இடித்துவழி காணும் –திரு
24: திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை முளைத்ததென
முகட்டின்இடை பறக்கஅற விசைத்ததிர ஓடும் –திரு
துதிக்கும்அடி யவர்க்கொருவர் கெடுக்கஇடர் நினைக்கின்அவர்
குலத்தைமுதல் அறக்களையும் எனக்கொர்துணை ஆகும் –திரு

தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண வழைப்பதென
மலர்க்கமல கரத்தின்முனை விதிர்க்கவளை வாகும் -திரு
பணைக்கைமுக படக்கரட மதத்தவள கஜக்கடவுள்
பதத்திடுநி களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் -திரு
சினத்தவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு குறைத்தலைகள்
சிரித்தெயிறு கடித்துவிழி விழித்தலற மோதும் -திரு
சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை அடுத்தபகை
அறுத்தெறிய உறுக்கிஎழு மறத்தைநிலை காணும் -திரு
தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி தரித்தமுடி
படைத்தவிறல் படைத்தஇறை கழற்குநிகர் ஆகும் -திரு
பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை கறுத்தகுழல்
சிவத்தஇதழ் மறச்சிறுமி விழிக்குநிகர் ஆகும் -திரு
32. திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன்மலை விருத்தன்என
துளத்தில்உறை கருத்தன்மயில் நடத்துகுஹன் வேலே -திரு
தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி தரித்தமுடி
படைத்தவிறல் படைத்தஇறை கழற்குநிகர் ஆகும் -திரு
சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை அடுத்தபகை
அறுத்தெறிய உறுக்கிஎழு மறத்தைநிலை காணும் -திரு
திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன்மலை விருத்தன்என
துளத்தில்உறை கருத்தன்மயில் நடத்துகுஹன் வேலே -திரு
பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை கறுத்தகுழல்
சிவத்தஇதழ் மறச்சிறுமி விழிக்குநிகர் ஆகும் -திரு
தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண வழைப்பதென
மலர்க்கமல கரத்தின்முனை விதிர்க்கவளை வாகும் -திரு
துதிக்கும்அடி யவர்க்கொருவர் கெடுக்கஇடர் நினைக்கின்அவர்
குலத்தைமுதல் அறக்களையும் எனக்கொர்துணை ஆகும் -திரு
சினத்தவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு குறைத்தலைகள்
சிரித்தெயிறு கடித்துவிழி விழித்தலற மோதும் -திரு
40. பணைக்கைமுக படக்கரட மதத்தவள கஜக்கடவுள்
பதத்திடுநி களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் -திரு
தனித்துவழி நடக்கும்என திடத்தும்ஒரு வலத்தும்இரு
புறத்தும்அரு கடுத்திரவு பகற்றுணைய தாகும் -திரு
சுடர்ப்பரிதி ஒளிப்பநில வொழுக்குமதி ஒளிப்பஅலை
அடக்குதழல் ஒளிப்பஒளிர் ஒளிப்பிரபை வீசும் -திரு

திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை முளைத்ததென
முகட்டின்இடை பறக்கஅற விசைத்ததிர ஓடும் -திரு
பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு கவிப்புலவன்
இசைக்குருகி வரைக்குஹையை இடித்துவழி காணும் -திரு
சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர் பெருத்தகுடர்
சிவத்ததொடை எனச்சிகையில் விருப்பமொடு சூடும் -திரு
ஸுரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்)மக பதிக்கும்விதி தனக்கும்அரி
தனக்கும்நரர் தமக்கும்உறும் இடுக்கண்வினை சாடும் -திரு
திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது குடித்துடையும்
உடைப்படைய அடைத்துதிரம் நிறைத்துவிளை யாடும் -திரு
48. பசித்தலகை முசித்தழுது முறைப்படுதல் ஒழித்தவுணர்
உரத்துதிர நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் -திரு
திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது குடித்துடையும்
உடைப்படைய அடைத்துதிரம் நிறைத்துவிளை யாடும் -திரு
பசித்தலகை முசித்தழுது முறைப்படுதல் ஒழித்தவுணர்
உரத்துதிர நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் -திரு
சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர் பெருத்தகுடர்
சிவத்ததொடை எனச்சிகையில் விருப்பமொடு சூடும் -திரு
ஸுரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்)மக பதிக்கும்விதி தனக்கும்அரி
தனக்கும்நரர் தமக்கும்உறும் இடுக்கண்வினை சாடும் -திரு
திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை முளைத்ததென
முகட்டின்இடை பறக்கஅற விசைத்ததிர ஓடும் -திரு
பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு கவிப்புலவன்
இசைக்குருகி வரைக்குஹையை இடித்துவழி காணும் -திரு
தனித்துவழி நடக்கும்என் திடத்தும்ஒரு வலத்தும்இரு
புறத்தும்அரு கடுத்திரவு பகற்றுணைய தாகும் -திரு
56. சுடர்ப்பரிதி ஒளிப்பநில வொழுக்குமதி ஒளிப்பஅலை
அடக்குதழல் ஒளிப்பஒளிர் ஒளிப்பிரபை வீசும் -திரு
தினத்தவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு குறைத்தலைகள்
சிரித்தெயிறு கடித்துவிழி விழித்தலற மோதும் -திரு
துதிக்கைமுக படக்கரட மதத்தவள கஜக்கடவுள்
பதத்திடுநி களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் -திரு
தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண வழைப்பதென
மலர்க்கமல கரத்தின்முனை விதிர்க்கவளை வாகும் -திரு

துதிக்கும்அடி யவர்க்கொருவர் கெடுக்கஇடர் நினைக்கின்அவர்
குலத்தைமுதல் அறக்களையும் எனக்கொர்துணை ஆகும் -திரு
திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன்மலை விருத்தன்என
துளத்தில்உறை கருத்தன்மயில்நடத்துகுஹன் வேலே -திரு
பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை கறுத்தகுழல்
சிவத்தஇதழ் மறச்சிறுமி விழிக்குநிகர் ஆகும் -திரு
தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி தரித்தமுடி
படைத்தவிறல் படைத்தஇறை கழற்குநிகர் ஆகும் -திரு
64. சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை அடுத்தபகை
அறுத்தெறிய உறுக்கிஎழு மறத்தைநிலை காணும் -திரு
திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன்மலை விருத்தன்என
துளத்தில்உறை கருத்தன்மயில் நடத்துகுஹன் வேலே. (6)

(இதையே பன்னிருமுறை சொல்லவும்)

பிலஹரி] மயிலின் ஆற்றல் (கந்தரலங்காரம்) [சுத்தாங்கம்

தடக்கொற்ற வேள்மயி லே!இடர் தீரத் தனிவிடில்நீ
வடக்கிற் கிரிக்கப் புறத்தும்நின் ரேகையின் வட்டமிட்டுக்
கடற்கப் புறத்தும் கதிர்க்கப் புறத்தும் கனகசக்ரத்
திடர்க்கப் புறத்தும் திசைக்கப் புறத்தும் திரிகுவையே. (7)

அடாணு] கந்தர் அலங்கார நூலின் பெருமை [சுத்தாங்கம்

சலங்காணும் வேந்தர் தமக்கும்அஞ் சார்யமன் சண்டைக்கஞ்சார்
துலங்கா நரகக் குழிஅணு கார்துஷ்ட நோய்அணுகார்
கலங்கார் புலிக்கும் கரடிக்கும் யானைக்கும் கந்தன்நன்னூல்
அலங்காரம் நூற்றுள் ஒருகவி தான்கற் றறிந்தவரே. (8)

ப்யாகடை]திருப்புகழின் ப்ரபாவம்(அபியுக்தர் பாட்டு)[சுத்தாங்கம்

மடங்கல் நடுங்கும் தணிச்சுடும் ஈதென்று மாதிரத்தோர்
அடங்கி நடுங்குவர் சூலா யுதம்என் றஸுரர்கடல்
ஒடுங்கி நடுங்குவர் வேலா யுதம்என் றுரகனும்கீழ்க்
கிடங்கில் நடுங்கும் மயிலோன் திருப்புகழ் கேட்டளவே. (9)

கந்தரலங்காரம்—கட்டளைக்கலித்துறை

யமுனாகல்யாணி] முருகன் பெருமை—கருணை [சுத்தாங்கம்

நாள்என் செயும்வினை தான்என் செயும்எனை நாடிவந்த
கோள்என் செயும்கொடுங் கூற்றென் செயும்குமரேசர் இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் ஷண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே. (10)

யமுனாகல்யாணி] திருப்புகழின் பெருமை—திருப்புகழ் ஓத [ஆதி

தனத்தன தனத்தந் தனத்தன தனத்தந்
தனத்தன தனத்தந் தனதான

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்கும்
செகுத்தவர் உயிர்க்கும் சினமாகச்-
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் றறிவோம்யாம்;
நினைத்ததும் அளிக்கும் மனத்தையும் உருக்கும்
நிசிக்கரு வறுக்கும் பிறவாமல்-
நெருப்பையும் எரிக்கும் பொருப்பையும் இடிக்கும்
நிறைப்புகழ் உரைக்கும் செயல்தாராய்;
தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந் தனபேரி-
தடுட்டுடு டுடுட்டுண் டெனத்துடி முழக்கும்
தளத்துடன் நடக்குங் கொடுசூரர்;
சினத்தையும் உடற்சங் கரித்தமலை முற்றும்
சிரித்தெரி கொளுத்துங் கதிர்வேலா-
தினைக்கிரி குறப்பெண் தனத்தினில் ஸுகித்தெண்
திருத்தணி இருக்கும் பெருமாளே. (11)

கந்தரந்தாதி—கட்டளைக்கலித்துறை

சங்கராபரணம்] கோளறு பாடல் [சுத்தாங்கம்

சேயவன் புந்தி வனவாஸ மாதுடன் சேர்ந்தசெந்திற்
சேயவென் புந்தி கல்நிசாச ராந்தக! சேந்த! என்னிற்
சேயவன் புந்தி பனிப்பாநு வெள்ளிபொன் செங்கதிரோன்
சேயவன் புந்தி தடுமாற வேதரும் சேதம்இன் றே. (12)

சங்கராபரணம்] தேவேந்த்ர ஸங்க வகுப்பு [த்ரிபுடை

தனதன தனதன தனதன தனதன தனதன தனதன
தானந்தன தந்தன தானந்தன தந்தன

தரணியில் அரணிய முரண்இர ணியன்உடல்
தனைநக நுதிகொடு
சாடோங்கு நெடுங்கிரி யோடேந்து பயங்கரி
தமருக பரிபுர ஒலிகொடு நடம்நவில்
சரணிய சதுர்மறை
தாதாம்புய மந்திர வேதாந்தப ரம்பரை
சரிவளை விரிசடை எரிபுரை வடிவினள்
சததள முகுளித
தாமாங்குசம் என்றிரு தாளாந்திர அம்பிகை
தருபதி ஸுரரொடு சருவிய அஸுரர்கள்
தடமணி முடிபொடி
தான்ஆம்படி செங்கையில் வாள்வாங்கிய சங்கரி
இரண கிரணமட மயில்ம்ருக மதபுள
கிதஇள முலைஇள
நீர்தாங்கி நுடங்கிய நூல்போன்ற மருங்கினள்
இறுகிய சிறுபிறை எயிறுடை யமபடர்
எனதுயிர் கொளவரின்
யான்ஏங்குதல் கண்டெதிர் தான்ஏன்று கொளுங்குயில்
இடுபலி கொடுதிரி இரவலர் இடர்கெட
விடுமன கரதல
ஏகாம்பரை இந்திரை மோஹாங்க ஸுமங்கலை
எழுதிய படம்என இருள்அறு சுடர்அடி
யிணைதொழு மவுநிகள்
ஏகாந்த ஸுகந்தரு பாசாங்குச ஸுந்தரி
கரணமு மரணமு மலமொடும் உடல்படு
கடுவினை கெடநினை
காலாந்தரி கந்தரி நீலாஞ்சநி நஞ்சுமிழ்
கனல்எரி கணபண குணமணி அணிபணி
கநவளை மரகத
காசாம்பர் கஞ்சுளி தூசாம்படி கொண்டவள்

கனைகழல் நினையலர் உயிர்அவி பயிரவி
கவுரி கமலைகுழை
காதார்ந்த செழுங்கழு நீர்தோய்ந்த பெருந்திரு
கரைபொழி திருமுக கருணையில் உலகெழு
கடல்நிலை பெறவளர்
காவேந்திய பைங்கிளி மாசாம்பவி தந்தவன்;
அரண்நெடு வடவரை அடியொடு பொடிபட
அலைகடல் கெடஅயில்
வேல்வாங்கிய செந்தமிழ் நூலோன் குமரன்குகன்
அறுமுகன் ஒருபதொ டிருபுயன் அபிநவன்
அழகிய குறமகள்
தார்வேய்ந்த புயன்பகை யாம்மாந்தர்கள் அந்தகன்
அடல்மிகு கடதட விகடித மதகளி
றநவர தமும்அக
லாமாந்தர்கள் சிந்தையில் வாழ்வாம்படி செந்திலில்
அதிபதி எனவரு பொருதிறல் முருகனை
அருள்பட மொழிபவர்
ஆராய்ந்து வணங்குவர் தேவேந்திர ஸங்கமே. (13)

கந்தரநுபூதி—கலிவிருத்தம்

மத்யமாவதி] குரு தரிசநம் [ஆதி

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே. (14)

மத்யமாவதி] [சுத்தாங்கம்

ஆபத்தில் அஞ்சல் என்ற பெருமாளே!
ஸகல துக்கமும்அறச் சகல ஸற்குணம் வரத்
தரணியிற் புகழ்பெறத் தகைமைபெற் றுனதுபொற்
சரணம் எப்பொழுதும்நட்பொடுநினைத்திட அருட்டருவாயே
பணியும் அடியார் சிந்தை மெய்ப்பொருளதாக நவில்
சரவணபவா! நின் அருள்தாராய்
நினைத்த காரியம் அநுகூலமேபுரி பெருமாளே
நின் அருள்தாராய் 15)

வேலும் மயிலும் துணை

[இதழ்-3-மெய்க்காவல் (வேல்மாறல்) முற்றிற்று]

கணபதி துணை
திருத்தணிகேசன் துணை

இதழ்—4

திருப்புகழ்க் கோ பூஜை

நீலாம்பரி] அருள் வேண்டல் [ஆ

(திருப்புகழ்)

தந்ததன தத்ததன தந்ததன தத்ததன
தந்ததன தத்ததன தனதான

ஐங்கரனை ஒத்தமனம் ஐம்புலம் அகற்றிவளர்
அந்திபகல் அற்றநினை(வு) அருள்வாயே!
அம்புவி தனக்குள்வளர் செந்தமிழ் வழுத்திஉனை
அன்பொடு துதிக்கமனம் அருள்வாயே!
தங்கிய தவத்துணர்வு தந்தடிமை முக்திபெற
சந்திர வெளிக்குவழி அருள்வாயே!
தண்டிகை கனப்பவுசு எண்டிசை மதிக்கவளர்
ஸம்ப்ரம விதத்துடனெ அருள்வாயே!
மங்கையர் ஸுகத்தைவெகு இங்கிதம் எனுற்றமனம்
உன்றனை நினைத்தமைய அருள்வாயே!
மண்டலிக ரப்பகலும் வந்தசுப ரக்ஷைபுரி
வந்தணைய புத்தியினை அருள்வாயே!
கொங்கில்உயிர் பெற்றுவளர் தென்கரையில் அப்பர்அருள்
கொண்டுஉடல் உற்றபொருள் அருள்வாயே!
குஞ்சர முகற்கிளைய கந்தன்என வெற்றிபெறு
கொங்கண கிரிக்குள்வளர் பெருமாளே. (1)

கந்தரந்தாதி—கட்டளைக் கலித்துறை

சங்கராபரணம்] நவக்ரஹ சேஷ்டை நீங்க [சுத்தாங்கம்

சேயவன் புந்தி வனவாஸ மாதுடன் சேர்ந்தசெந்திற்
சேய!வன் புந்தி கல்நிசாச ராந்தக! சேந்த! என்னிற்
சேயவன் புந்தி புனிப்பாநு வெள்ளிபொன் செங்கதிரோன்
சேயவன் புந்தி தடுமாற வேதருஞ் சேதம்இன்றே. (2)

தேவேந்த்ர ஸங்க வகுப்பு

[illegible]ங்கராபரணம் அல்லது மோஹநம்] [ஆதி அல்லது த்ரிபுடை

தனதன தனதன தனதன தனதன தனதன தனதன
தானந்தன தந்தன தானந்தன தந்தன

[illegible]ரணியில் அரணிய முரண்இர ணியன்உடல் தனைநக நுதிகொடு
சாடோங்கு நெடுங்கிரி யோடேந்து பயங்கரி
தமருக பரிபுர ஒலிகொடு நடம்நவில் சரணிய சதுர்மறை
தாதாம்புய மந்திர வேதாந்த பரம்பரை
சரிவளை விரிஜடை எரிபுரை வடிவினள் சததள முகுளித
தாமாங்குசம் என்றிரு தாளாந்தர அம்பிகை
தருபதி ஸுரரொடு சருவிய அஸுரர்கள் தடமணி முடிபொடி
தான்ஆம்படி செங்கையில் வாள்வாங்கிய சங்கரி;
[illegible]ரண கிரணமட மயின்ம்ருக மதபுள கிதஇள முலைஇள
நீர்தாங்கி நுடங்கிய நூல்போன்ற மருங்கினள்
இறுகிய சிறுபிறை எயிறுடை யமபடர் எனதுயிர் கொளவரின்
யான்ஏங்குதல் கண்டெதிர் தான்ஏன்று கொளுங்குயில்
இடுபலி கொடுதிரி இரவலர் இடர்கெட விடுமநகரதல
ஏகாம்பரை இந்திரை மோஹாங்க ஸுமங்கலை
எழுதிய படம்என இருள்அறு சுடர்அடி இணைதொழு மவுநிகள்
ஏகாந்த ஸுகந்தரு பாசாங்குச ஸுந்தரி;
[illegible]ரணமு மரணமு மலமொடும் உடல்படு கடுவினை கெடநினை
காலாந்தரி கந்தரி நீலாஞ்ஜநி நஞ்சுமிழ்
கனல்எரி கணபண குணமணி அணிபணி கநவளை மரகத
காசாம்பர கஞ்சுளி தூசாம்படி கொண்டவள்
கலைகழல் நினையலர் உயிர்அவி பயிரவி கவுரி கமலைகுழை
காதார்ந்த செழுங்கழு நீர்தோய்ந்த பெருந்திரு
கரைபொழி திருமுக கருணையில் உலகெழு கடல்நிலை பெறவளர்
காவேந்திய பைங்கிளி மாசாம்பவி தந்தவன்;
அரண்நெடு வடவரை அடியொடு பொடிபட அலைகடல் கெடஅயில்
வேல்வாங்கிய செந்தமிழ் நூலோன்குமரன்குஹன்
அறுமுகன் ஒருபதொ டிருபுயன் அபிநவன் அழகிய குறமகள்
தார்வேய்ந்த புயன்பகை யா(ம்)மாந்தர்கள் அந்தகன்

அடல்மிகு கடதட விகடித மதகளி றநவர தமும்அக
லாமாந்தர்கள் சிந்தையில் வாழ்வாம்படி செந்திலில்
அதிபதி எனவரு பொறுதிறல் முருகனை அருள்பட மொழிபவர்
ஆராய்ந்து வணங்குவர் தேவேந்திர ஸங்கமே. (3

கந்தரலங்காரம்—கட்டளைக்கலித்துறை

முகாரி] கதியின் மைகூறல் [சுத்தாங்க

கதிதனை ஒன்றையும் காண்கின்றி லேன்கந்த வேல்முருகா
நதிதனை அன்னபொய் வாழ்வில்அன் பாய்நரம் பாற்பொதிந்த
பொதிதனை யும்கொண்டு திண்டாடு மாறெனைப் போதவிட்ட
விதிதனை நொந்துநொந் திங்கேஎன் றன்மனம் வேகின்றதே, (4

கந்தரலங்காரம்—கட்டளைக்கலித்துறை

ஸஹானா] ப்ரார்த்தனை—திருவடி பெற [சுத்தாங்க

காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருளாய்
தூவிக் குலமயில் வாஹன னே! துணை ஏதுமின்றித்
தாவிப் படரக் கொழுகொம் பிலாத தனிக்கொடிபோற்
பாவித் தனிமநம் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே. (5

பீலு] திருவருள் பெற (கந்தரநுபூதி—கலிவிருத்தம்) [ஆ

ஆதாரம் இலேன் அருளைப் பெறவே
நீதான் ஒருசற்றும் நினைந்திலையே
வேதாகம ஞாந விநோத மநோ
தீதா! ஸுரலோக சிகாமணியே. (6

மோஹநம்] கவலை தீர (கந்தரநுபூதி—கலிவிருத்தம்) [ஆ

எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ
சிந்தா குல மானவை தீர்த்தெனையாள்
கந்தா கதிர்வே லவனே! உமையாள்
மைந்தா! குமரா! மறைநா யகனே. (7

மோஹநம்] குருமூர்த்தி வர (கந்தரநுபூதி—கலிவிருத்தம்) [ஆ

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே. (8

சுபம்

ஸ்ரீ க்ருஷ்ண பகவான் பூலோகத்திற் பசுக் கூட்டங்களைக் காப்பாற்றியும் அவைகளுக்குத் தன் பேரன்பைக் காட்டியும், பணி செய்தும்வந்த விஷயம் யாவரும் அறிந்ததே. மணிமேகலையென்னும் சங்கநூலில் ஆபுத்திரனென்பவன் திக்கற்றவனாயிருந்து ஒரு பசுவுக்கு உதவி புரிந்தமையால் சக்ரவர்த்திப் பதவியையடைந்தான். சண்டேசுர நாயனார், திருமூல நாயனார் சரித்திரங்களாலும் பசுவின் பெருமை நன்கு விளங்கும். சிவதருமோத்திரம் என்னும் நூலிற் பசுவின் பெருமை விரித்துக் கூறப்பட்டுளது. ஆதலால், ஒவ்வொருவரும் தங்கள் இல்லங்களில் பசுக்கள் இல்லாவிட்டாலும் பசு வைத்திருப்பவர் வீட்டுக்குச் சென்றாகிலும் கோ பூஜை செய்தால் மிக்க நலமுண்டாகும். பூஜை செய்வோர்கள் மாலையிற் சாம்பிராணி தூபமிட்டுப் பசுவின் பின்புறத்தில் கற்பூர ஹாரத்தி செய்து நமஸ்கரிக்கவும்.

"கன்று பயில் ஆன்நிரை காக்கும் இதன்மேல் இல்லை கடன்"

—பெரியபுராணம் - சண்டேசுரர் - 23



(இதழ்-4-திருப்புகழ்க் கோ பூஜை முற்றும்.)

உ

கணபதி துணை

திருத்தணிகேசர் துணை

இதழ் — 5

1. திருப்புகழ் அர்ச்சனை (108)

"நாதா குமரா நம" (கந்தரநுபூதி)

†66	ஓம்	உம்பர்கள் ஸ்வாமீ	நமோ நம
(கொம்பனை)	,,	எம்பெருமானே	நமோ நம
	,,	ஒண்டொடி மோஹா	நமோ நம
100	,,	நாத விந்து கலாதீ	நமோ நம
(நாதவிந்து)	,,	வேத மந்த்ர ஸ்வரூபா	நமோ நம
	,,	ஞாந பண்டித ஸ்வாமீ	நமோ நம
	,,	வெகு கோடி நாம சம்பு குமாரா	நமோ நம
	,,	போக அந்தரி பாலா	நமோ நம
	,,	நாக பந்த மயூரா	நமோ நம
	,,	பரசூரர் சேத தண்ட விநோதா	நமோ நம 1
	,,	கீத கிண்கிணி பாதா	நமோ நம
	,,	தீர ஸம்ப்ரம வீரா	நமோ நம
	,,	கிரிராஜ தீப மங்கள ஜோதீ	நமோ நம
	,,	தூய அம்பல லீலா	நமோ நம
	,,	தேவகுஞ்ஜரி பாகா	நமோ நம 1
101	,,	போதகம் தரு கோவே	நமோ நம
(போதகம்)	,,	நீதி தங்கிய தேவா	நமோ நம
	,,	பூதலந்தனை ஆள்வாய்	நமோ நம
	,,	பணி யாவும் பூணுகின்ற பிரானே	நமோ நம
	,,	வேடர் தம்கொடி மாலா	நமோ நம 2
	,,	போதவன் புகழ் ஸ்வாமீ	நமோ நம
	,,	அரிதான வேத மந்திர ரூபா	நமோ நம
	,,	ஞாந பண்டித நாதா	நமோ நம
	,,	வீர கண்டைகொள் தாளா	நமோ நம

† எண் திருப்புகழ்ப் பாடல் எண். அடைப்புக் குறிக்குள் உள்ளவை அவ்வப் பாடலின் முதற்குறிப்பு.

ஓம் அழகான மேனி தங்கிய வேளே நமோ நம 25
,, வான பைந்தொடி வாழ்வே நமோ நம
,, வீறு கொண்ட விசாகா நமோ நம
338 ,, சக்தி பாணீ நமோ நம
(சக்தி) ,, முக்தி ஞாநீ நமோ நம
,, தத்வவாதீ நமோ நம 30
,, விந்து நாத ஸத்து ரூபா நமோ நம
,, ரத்ந தீபா நமோ நம
,, தற் ப்ரதாபா நமோ நம
366 ,, சரவண ஜாதா நமோ நம
(சரவண) ,, கருணை அதீதா நமோ நம 35
,, சததள பாதா நமோ நம
,, அபிராம தருண கதீரா நமோ நம
,, நிருபமர் வீரா நமோ நம
,, சமதள ஊரா நமோ நம
,, ஜகதீச பரம ஸ்வரூபா நமோ நம 40
,, ஸுரர்பதி பூபா நமோ நம
,, பரிமள நீபா நமோ நம
,, உமை காளி பகவதி பாலா நமோ நம
,, இஹபர மூலா நமோ நம
,, பவுருஷ சீலா நமோ நம 45
611 ,, மன்றுளாடும் சிவசிவ்ஹரஹர தேவா நமோ நம
(அவகுண) ,, தெரிசந பரகதி ஆனாய் நமோ நம
,, திசையினு மிசையினும் வாழ்வே நமோ நம
,, செஞ்சொல் சேரும் *திருதரு கலவி
மஞ்ஞளா நமோ நம
,, திரிபுரம் எரிசெய்த கோவே நமோ நம 50
730 ,, சீதள வாரிஜ பாதா நமோ நம
(சீதள) , நாரத கீத விநோதா நமோ நம
,, சேவல மாமயில் ப்ரீதா நமோ நம
,, மறைதேடும் சேகரமான ப்ரதாபா நமோ நம
,, ஆகம ஸார ஸ்வரூபா நமோ நம 55

* 'தினைபுன வநிதை மஞ்ஞளா' எனவும் பாடம்

ஓம் தேவர்கள் ஸேனை மஹீபா நமோ நம
,, கதிதோயப் பாதகம் நீவு குடாரா நமோ நம
,, மா அஸுரேச கடோரா நமோ நம
,, பாரினிலே ஜய வீரா நமோ நம
,, மலைமாது பார்வதியாள் தரு பாலா நமோ நம

,, நாவல ஞாந மநோலா நமோ நம
,, பால குமார ஸுவாமீ நமோ நம
817 ,, சிங்கார ரூபமயில் வாஹந நமோ நம
(வங்கார) ,, கந்தா குமார சிவ தேசிக நமோ நம
,, ஸிந்தூர பார்வதி ஸுதாகர நமோ நம

,, விருதோதை ஸிந்தான ஜோதி
கதிர்வேலவ நமோ நம
,, கங்காள வேணி குருவானவ நமோ நம
904 ,, அரிமருகோனே நமோ நம
(அரிமருகோ),, அறுதி இலானே நமோ நம
,, அறுமுக வேளே நமோ நம

,, அரஹர சேயே நமோ நம
,, இமையவர் வாழ்வே நமோ நம
,, அருண ஸ்வரூபா நமோ நம
996 ,, போத நிர்க்குண போதா நமோ நம
(போதநிர்க்) ,, நாத நிஷ்கள நாதா நமோ நம

,, பூரணக் கலை ஸாரா நமோ நம
,, பஞ்சபாண பூபன் மைத்துன பூபா நமோ நம
,, நீப புஷ்பக தாளா நமோ நம
,, போக ஸ்வர்க்க புபாலா நமோ நம
,, சங்கமேறும் மா தமிழ்த்ரய சேயே நமோ நம

,, வேதன த்ரய வேளே நமோ நம
,, வாழ் ஜகத்ரய வாழ்வே நமோ நம
996-1 ,, ஆதி ஸற்குண சீலா நமோ நம
(ஓதுமுத்தமிழ்),, ஆடகத் திரிசூலா நமோ நம
,, ஆதரித்தருள் பாலா நமோ நம

ஓம்	உந்தி ஆமை ஆனவர்க் கினியானே	நமோ நம
,,	ஞான முத்தமிழ் தேனே	நமோ நம
,,	ஆரணற் கரியானே	நமோ நம
,,	மன்றுளாடும் தோதி தித்திமி தீதா	நமோ நம
,,	வேத சித்திர ரூபா	நமோ நம 90
,,	சோபம் அற்றவர் ஸ்வாமீ	நமோ நம
,,	தன்மராஜ தூதனைத் துகை பாதா	நமோ நம
,,	நாத ஸற்குரு நாதா	நமோ நம
997 ,,	வேத வித்தகா ஸ்வாமீ	நமோ நம
(வேதவித்) ,,	வேல்மிகுத்த மாசூரா	நமோ நம 95
,,	வீம சக்ர யூகாளா	நமோ நம
,,	விந்துநாத வீர பத்ம சீர் பாதா	நமோ நம
,,	நீலம் மிக்க கூதாளா	நமோ நம
,,	மேகம் ஒத்த மாயூரா	நமோ நம
,,	விண்டிடாத போதம் ஒத்த பேர் போதா	நமோ நம 100
,,	பூதம் மற்றுமே ஆனாய்	நமோ நம
,,	பூரணத்துளே வாழ்வாய்	நமோ நம
,,	துங்கம் மேவும் பூதரத்தெலாம் வாழ்வாய்	நமோ நம
,,	ஆறிரட்டி நீள் தோளா	நமோ நம
,,	பூஷணத்து மா மார்பா	நமோ நம 105
,,	ஆர்யை பெற்ற சீராளா	நமோ நம
,,	சூரை அட்டு நீள் பேரா	நமோ நம
,,	ஆரணத்தினர் வாழ்வே	நமோ நம 108

[இதழ் – 5—1—திருப்புகழ் அர்ச்சனை (108) முற்றும்]

இதழ்—5

2. திருப்புகழ்ப் போற்றி (16)

"நாத! போற்றி" (1214)

60 (களபம்) துணைவ குணதர சரவணபவ நம போற்றி
1089 ஏனல் விளைவாள் தன் லளிதவிர் சிங்கார
(அகில நறுஞ்) தநமுறு ஸிந்தூர நம போற்றி
827 அலகில் தமிழால் உயர் ஸமர்த்தனே போற்றி
(கலகவிழி) அருணைநகர் கோபுர விருப்பனே போற்றி
அடல்மயில் நடாவிய ப்ரியத்தனே போற்றி
அவதான அறுமுக ஸுவாமி எனும்
அத்தனே போற்றி
அகில தலம் ஓடிவரு நிர்த்தனே போற்றி
அருணகிரி நாத எனும் அப்பனே போற்றி
அஸுரேசர் பெலம் மடிய வேல்விடு
கரத்தனே போற்றி
கரதல கபாலி குரு வித்தனே போற்றி
பெரிய குறமாதணை புயத்தனே போற்றி
1257 ஏகாந்த வீரம் போற்றி
(நாகாங்க) நீலாங்க யாநம் போற்றி
ஏடார்ந்த நீபம் போற்றி
முகில்தாவி ஏருங்கல் ஏழும் சாய்த்த
நான்மூன்று தோளும் போற்றி
யார் வேண்டினும் கேட்ட பொருள் ஈயும்
த்யாகாங்க சீலம் போற்றி

[இதழ்—5—2—திருப்புகழ்ப் போற்றி (16) முற்றும்.]

உ

கணபதி துணை

திருத்தணிகேசர் துணை

இதழ்—6

திருப்புகழ்த்தேவன் ஆற்றுப்படை

திருப்புகழ்த் தெய்வமாம் செவ்வேளின் திருவருளால் முக்தி வீடு பெற்றுள்ள **ஸ்ரீ வள்ளிமலைத் திருப்புகழ் ஸச்சிதானந்த ஸ்வாமிகள்** பின் வருமாறு கூறி வீடு பெற விரும்பும் அன்பரை அத் தெய்வத்தினிடத்தே ஆற்றுப்படுத்து கின்றார்.

'ஐந்துகர பண்டிதன் தம்பி'யும் (*14), 'முக்கட்சிவன் பெறும் சற்புத்ர'னும் (1277), 'அபிராம நாயகி தன் மதலை'யும் (†வகு.1), 'கார்த்திகைதன் சிறியோ'னும் (11), 'கார்த்திகை பெற்ற விளக்கொளி' யும் (வகு.16), 'மரகத நாராயணன் மருமக'னும் (583), 'திருமருக'னும் (82), 'ஸாரதி உத்தமி துணை'வனும் (450), 'காமவேள் மைத்துன'னும் (1108), 'வேதா மைத்துன வே'ளும் (823,) 'தெய்வகுஞ்ஜரி பாக'னும் (100), 'திருத்திய புனத்திடை வனத்துறை உடுத்தினி திருப்பவ'ளாம் (வகுப்.12), 'வள்ளிக்கு வாய்த்த பெருமா'ளும் (319),

'சரவண ஸம்பவ'னும் (933), 'நீலச் சிகண்டியில் ஏறும் பிரா' னும் (‡அலங். 26), 'ரக்ஷதரு சிற்றடி'யோனும் (விநா.துதி-3), 'மரகத பக்ஷகுலத் துரகத் திவாகரர் வடிவை உருக்கி வடித்த திருக்கை வேல'னும் (வகு.6), 'கடப்ப மல ரணிவோ'னும் (646), 'கோடற்பூ முட்டா திட்டத் தணிவோனும் (483). 'சீராடு வீர மாது மருவிய ஈராறு தோள'னும் (350), 'ஆறிரு பொற் செங்கை நாயக'னும் (123), 'ஷண்முக நாத'னும் (882), 'தண்ணளி தருமொரு பன்னிரு விழி பயில்'பவனும் (1232), 'குக்குடக் கொடி தரித்த பெருமா'ளும் (1294), முழுதும் அழகிய குமர'னும் (1277),

---

* வெறும் எண் வ.த. சுப்ரமண்ய பிள்ளையவர்கள் பதிப்பின் திருப்புகழ் எண். †வகு—திருவகுப்பு. ‡அலங்—கந்தரலங்காரம்.

'சூரன் பொடிபட வேல்கொண் டமர் செய்த'வனும் (104 'ஸம்பந்தன் எனத் தமிழ் தேக்கிய பெருமா'னும் (128 'முத்தமிழ் வே'ளும் (314)', 'தேவச் சொர்க்கச் சக்கிரவர்த்தி'ய (1303), 'நாலந்த வேதத்தின் பொருளோனே நான் என்று மார்த டியவனும் (1295), 'சிவனுர் மநங்குளிர உபதேச மந்த்ரம் இ செவி மீதிலும் பகர்செய் குருநாத'னும் (109), 'வாழிஎன நித்த மறவாது பரவிற் சரண வாரிஜம் அளிக்கும் உபகாரக் காரன (†வகு. 2), 'அடியார்க்கு நல்ல பெருமா'னும் (618, முக்தி பெற சொல் வசநக்கார'னும் (39) ஆகிய

செவ்வேற் சேயின் சேவடியைச் சிந்திக்கும் செவ்விய உ ளத்துடன் செல்லும் செலவை நீ விரும்பினுல் உன் நெஞ்சத்த விழைந்த இனிய வீடு பேறு என்னும் கதியைத் தப்பாமல் இ பொழுதே பெறுவை.

அங்ஙனம் அச் சேய் உறையுமிடம் தெளிந்துணர்ந்து வழிபட நீ வீடு பேற்றைப் பெறுதற்கு, அச் சேய் யாண்டுறையும் என்ன கூறுகேன்.

ஆறு திருப்பதிகள்

1. திருப்பரங்குன்றம்

அச் சேய், 'சீதளம் உந்து மணம் தயங்கும் பொழில் சூழ் விஞ்சைகள் வந்திறைஞ்சும்பதி'யும் (9), 'மதியும் கதிரும் தடவும் உயர்கின்ற வனங்கள் பொருந்திய வளமொன்'றியதும் (2), 'செ பகம் பைம்பொன் மலர் செறி சோலை திங்களும் செங்கதி மங்குலும் தங்கு'வதும் (14), 'இரு மூவர் விஞ்சையர் சூழ் பரங் (வகுப். 25) எனச் சிறப்பிக்கப் பெற்றதுமான 'தேவர் பணிந்தெ தென்பரங்குன்றி'லே (9) அமர்ந்துறைதல் உண்டு.

2. திருச்செந்தூர்

அஃதன்றியும், 'மன்றல்கமழ் பூக தெங்கு திரள் சோலை வ படு வாவி புடை சூழ' (62), இருப்பதும், 'மந்தி நடமாடு'வதும் (சிகர கோபுரத் தினுமதி ளினும் மேற் செம்பொற் கம்பத் தளமீ

தெருவி லேயும் நித்திலம் எறி'யப் பெறுவதும் (63), 'திரளுமணி தரளமுயர் தெங்கில் தங்கிப் புரளஎறி திரைமகர சங்கத் துங்கத் திமிரஜல நிதிதழுவு செந்தில்' (17) என்ற 'செயத் துங்கக் கொடைத் துங்கத் திருத்தங்கித் தரிக்கும் பொற் றிருச்செந்திற் பதி'யிலே (33) நிலைத்திருத்தலும் உண்டு.

3. திருவாவினன்குடி—பழநி

அஃதன்றியும், 'ஆதவன் கதிர் ஓவா துலாவிய கோபுரங்களர் மாமாது மேவிய'தும் (102), 'கொந்தவி ழுந்தட மேநி ரம்பிய பண்பு தரு'வதும் (111), 'கோமளம் பல சூழ் கோயில் மீறிய'தும் (101), 'ஆலை யும்பழனச் சோலையும்புடைசுற்'றுவதும் (108) 'ஆத ரம்பயில் ஆரூரர் தோழமை சேர்தல் கொண்டவ ரோடே முனளி னில் ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையில்ஏகி, ஆதி யந்த உலா ஆசு பாடிய சேரர் கொங்கு வைகாவூர் நனுடதில்' (100) உள்ளதும் (ஆன ஆவினன் குடியுடன்), "சிவமயமா"னதும் (156), 'காசியின் மீறிய'தும் (194), 'பதினு லுலகோர் புகழ்'வதும் (170), 'அதிசயம் அநேகம் உற்ற'தும் (214), 'பழனத் துழவர்கள் ஏரிட வேவிளை கழுனிப் புரவுகள் போதவு மீறிய பழநிச்சிவகிரி' எனப் பெற்றதோடு 'அங்கம் கஞ்சம் சங்கம் பொங்கும் கயநிறை வளமுறு சிவகிரி' (115) எனவும் பெயர் பெற்றதுமான 'அமரர்க் கிறையே வணங்கிய பழநித் திருவாவினன்குடி யதனிற் குடியாய் இரு'த்தலும் உண்டு.

4. திருவேரகம் [சுவாமிமலை]

அஃதன்றியும், 'ஏரக வெற்பெனும் அற்புத மிக்க சுவாமிமலைப் பதி' (197) 'சுபானமுறு ஞானம் தபோதனர்கள் சேரும் சுவாமிமலை' (202), 'காவேரி நேர் வடக்கி லேவாவி பூமணத்த காவார் சுவாமி வெற்பு' (220) 'குருமலை' (210) என்றெல்லாம் புகழப் பெற்றதான 'சிவனுர் தமக்குரிய உபதேச வித்தை(யை அம் முருகன்) அருள் திருவேரகப் பதி'யில் (224) சிறக்க உறைதலும் உண்டு.

5. குன்றுதோருடல் (பல மலைகள்)

அஃதன்றியும், 'வெளுத்த, பொருப்பு' (240), 'ரஜதகிரி' (242 எனப்பட்ட, 'மிகைத்துத் திடத்தொ டுற்று அசைத்துப் பொறு தரக்கன் மிகுத்துப் பெயர்த் தெடுத்த கயிலாய' மலையிலும் (243 'வேங்கையும் வாரணமும் வேங்கையும் மானும்வளர் வேங்க மாமலை' (246)யிலும்,

'உற்பலச் சுனைச் சிறப்புடை'யதும் (252), 'சிறப்பொடு ஞான தமிழ்த்ரயம்' (257) நீண்டதும், 'திருக்குளம் நாளும் பலத்தி மூச'உள்ளதும் (258), 'புவிக்குயி ரா'வதும் (258), 'மாரன் வெற் கொள் பூமுடிக் குழலார் வியப்புற நீடு மெய்த்தவர் வாழ்'வதுமா (277), 'திருப்புகழ் ஓதும் கருத்தினர் சேரும் திருத்தணி' (259 யிலும்,

'அடிநாட்கள் செய்த பிழை நீக்கி என்னை அருள் போற்று வண்மை', (321) தந்து, 'வடிவாட்டி வள்ளி அடி போற்றி வள் மலை காத்'திருக்க(321), 'மரைவெங் கயம் பொருந்திட வண் டின குவிந் திசைஒன்ற மந்திசந் துடனுடும் வரை'யாம் (322), 'வள் படர்சாரல் வள்ளிமலை'யிலும் (313)

'கதலிவனம்' (325), 'கழுகுதொழு வேதகிரி'(325) எனப்பெற் 'செகத்தில் உச்சம் பெற்றம ராவதி அதற்கும் ஒப்பென் றுற் கேசெறி திருக்கழுக்குன்றத்'திலும் (324), 'பேடைமட ஓதிமங் கூடிவிளை யாடுகின்ற பேறைநகர்' (327) என்ற தலத்து மலையிலு 'மயிலந்தண் மாமலை'யிலும் (328), 'சிகர கோபுர சித்திர மண்ட மகர தோரண ரத்ந அலங்க்ருத திரிசிராமலை'யிலும் (337), 'சித் யுடைக் கற்குடி'யிலும் (346), சிவதைப் பதிரத் தினவெற்'பாகி (347) 'ஒப்பிலா மா மணிக் கிரி'யிலும் (349), 'வெந்த நீறணி வே இருடிகள் பந்த பாச விகார பரவச வென்றியான ஸமாதி முறுகு முறை கூடும்' (357) 'கோனுடு சூழ் விராலிமலை'யிலும் (350)

'திண்கோடரங்கள் எண்கோடுறங்கு'வதும் (368), 'திர சங் கோடை வாவிகள் மிகுத்தும் காவி சூழ் தரு'வதும் (37 'மறைகுலாவு'வதும் (374), 'செஞ்சாலி கஞ்சம் ஒன்ருய் வளர்ந்த

மான (367), 'கொங்கு லாத்தித் தழைக்கும் காப்பொற் கொண்டல் ஆர்த்துச் சிறக்கும் காட்சிக் கொங்கு நாட்டுத் திருச்செங் கோட்' டிலும் (373),

'கொல்லிமலை' (388), 'ராஜ கெம்பீர வளநாட்டுமலை' (390), 'ஞானமலை' (391), 'ஊதிமலை' (393), 'மதுரம் எனும்நதி பெருகி இரு கரை வழிய வகைவகை குதிபாயும் குருடிமலை' (395), 'சிங்காரச் செம்பொன் மதிளத லங்காரச் சந்த்ர கலைதவழ் தென்சேரிக் குன்று' (397), 'கொங்கணகிரி' (398), 'தீர்த்தமலை' (390), 'கநககிரி' (400), 'புகலரிய தான தமிழ் முநிவர் ஓது புஷ்பமலை' (401), 'பூந்தளிர்கள் வீறு வேங்கைகள் பலாசு பூங்கதலி கோடி திகழ் சோலை பூந்தடம் உலாவு கோம்பைகள் குலாவு பூம்பறை' (402), 'தும்பி பாடக் குனிந்திலங்கும் கொம்பும் கொந்தும் துன்று சோலைக் கொழுங் கொடுந்திண் குன்றம்' (403), 'திகழு மயிலின்மலை'யும் (410), 'வாளுடு புகழ்நாடு தேனுறு புடைசூழு மாயூர கிரி'யுமான (411), 'வளமிகுந்த குன்ற நகர்' (குன்றக்குடி) (405), 'அகத்ய மாமுநி பொருப்பு' (413), 'கழுகுமலை' [414] 'வள்ளியூர்' [417], 'வடவையாறு சூழ்சீத கதிர காம மூதூர்' (419) 'கதிரகாம வெற்பு' [421] எனப்பெறும் 'கரிய யூகத்திரட் பலவின் மீதிற்சுளைக் கனிகள் பீறிப்புசித் தழராடிக் கதலி சூதத்தினிற் பயிலும் ஈழத்தினிற் கதிரகாமக்கிரி' [425], 'அருக்கொணமலை' [431], 'திருக் கோணமலை' [432] முதலிய மலைகளிலும் உறைதலும் உண்டு.

அஃதன்றியும், 'பலமலை யுடைய'வனாய் [234], 'வடிவதாம் மலை யாவையும் மேவி' [235], 'பலகுன்றிலும் அமர்ந்து' [233], 'குன்றுதொருடல்' [236] புரிதலும் உண்டு.

6. பழமுதிர்சோலை

அஃதன்றியும், 'ஆரத் தோடகில் உற்ற தருக்குலம் மேகத் தோடொரு மித்து நெருக்கிய ஆதிச் சோலை மலைப்பதி' யும் [443] 'முநிவர் தேவர் ஞானமுற்ற புநித சோலை மாமலை'யுமாம் [442], 'திருமலிவான பழமுதிர் சோலை மலைமிசை' மேவி வீற்றிருத்தலும் உண்டு.

இங்ஙனம் 'ஆறுநிலை' [வகு. 6] எனப்பெறும் 'அறுபதி நிலை' [440] யாம் *ஆறு திருப்பதியில் வளர்' கிருன் [450] முருகன்.

பஞ்சபூத ஸ்தலங்கள்

1. காஞ்சீபுரம்

அஃதன்றியும், 'புநித சங்கத்துக் கைத்தல நிர்த்தன் பழைய சந்தத்தைப் பெற்ற மடப்பெண் புகலு கொண்டற்குச் சித்தியளிக்கும்' [458], 'அறமுறு சீ காஞ்சி' [480], 'கம்பை ஆற்றினில் அன்னை தவம்புரி கச்சி' [492], 'கம்பை நகர்' [490] என்றெல்லாம் பெயர் பெற்றதான ப்ருதிவித் தலமாம் 'காந்தக்கலும் ஊசியுமே என ஆய்ந்துத் தமிழ் ஓதிய சீர்பெறு காஞ்சிப்பதி மாநகர்க்கண் ஏகம்பம், 'கற்புத்தப் பாதுல கேழையும் ஒக்கப்பெற்ருள் விளையாடிய கச்சிக்கச்சாலை' [489], 'கவுரி திருக்கொட்டு' (463), 'குமர கோட்டம்' (494) இவற்றில் வீற்றிருத்தலும் உண்டு.

2. திருவானைக்கா

அஃதன்றியும், 'மனித்தராதி சோணுடு தழைக்க மேவு காவேரி மகப்ரவாஹ பானீயம் அலைமோதும் மணத்த சோலை சூழ்காவை' [497], திரைக்கா விரிக்கே கரைக்கா னகத்தே சிவத்யாந முற்ருே சிலந்தி நூல்செய் திருக்காவ ணம்' [500], 'துங்க கஜாரணியம்' [495]. 'கரிவனம்' [504], என்றெல்லாம் கூறப்பெறும் அப்புத் தலமாம் 'ஆழித் தேர்மறு கிற்பயில் மெய்த்திரு நீறிட்டான் மதில் சுற்றிய பொற்றிரு ஆனைக்காவினில் அப்பர் ப்ரியப்படு' மாறு அமர்ந்திருத்தலும் உண்டு.

---

*நம்முள் இருக்கும் ஆறு ஆதாரங்கள் வாயிலாக யோக மார்க்கத்தில் அடையத்தக்க அதே நிலையை, இந்த ஆறு திருப்பதிகளிலும் உள்ள ஆருதாரப் பொருளாம் ஆறுமுகனைப் பக்தி மார்க்கத்தின் மூலம் வழிபட்டு அடையலாம் என்பது, 'ஆறு திருப்பதியில் வளர் பெருமாளே' [450] 'அறுபதி நிலைமேவிய பெருமாளே [449] என்னும் பாடற் பகுதிகளாற் பெறப்படும். 'ஆறு படைவீடு' என்னுமல் அருணகிரியாரைப் போலவே 'ஆறு திருப்பதி கண்டு' என்ருர் கந்தர் கலிவெண்பாவிற் குமர குருபரரும். 'ஆறு படை வீடு' என்னும் சொல் வழக்கு அருணகிரியுரர், குமரகுருபரர் காலத்திற்குப் பின்னர்தான் வந்திருக்க வேண்டும் போலும்.

3. திருவருணை

அஃதன்றியும், 'முகிலு மதியமும் ரவிஎழு புரவியும் நெடிய குலைமிட றிடற முதுககன முகடு கிழிபட வளர்வன கமுகின மிசை வாளை, முடுகு கயலுகள் வயல்களும் முருகவிழ் தடமும் முளரிய அகழியும் மதில்களும் முழுதும் உடையதொர்' தேயுத்தலமாம் அருணையில் [512], 'அடையாளக்காரனாய்' 'ஆடக விசித்ர கன, கோபுர முகப்பிலும் [வகு. 4] 'செழுநீர் வயல் சூற் றருணை புரியிற் றிருவீதி'யிலும் [535], 'திருவுலாவு சோணேசர் அணுமலை முகி லுலாவு விமான நவோ நிலை சிகர மீது[ம்] குலாவி உலாவி' [526) யிருத்தலும் உண்டு.

4. திருக்காளத்தி

அஃதன்றியும், 'சிங்கம தாகத் திரிந்த மால்கெரு வம்பொடி யாகப் பறந்து சீறிய சிம்புள தாகச் சிறந்த காளன வருகோமுன். செங்கதி ரோனைக் கடிந்த தீவினை துஞ்சிடவே நற்றவஞ்செய் தேறிய தென்கயிலாயம்' (589] எனும் வாயுத்தலமாம் திருக்காளத் தியில் 'திருத்தாள் முத்தர்க்கருள்வோனா'ய்த் [588] திகழ்ந்துறை தலும் உண்டு.

5. சிதம்பரம்

அஃதன்றியும், 'கநகஸபை' [593], 'கநகம்பலம்' [594], 'செம் பொனம்பலம் (595), 'ஆடக திருச்சிற்லம்பலம்' [599], 'செந்தமிழ் ஞான தடாக மென் சிவகங்கை அளாவு மகா சிதம்பர திண்சபை' [609], 'ஆதி நாதர் ஆடு நாடகசாலை அம்பலச் சிதம்பரம்' [610], 'புலிசை அம்பலம்' [613], 'மன்று' [614], 'பெரும்பற்றப் புலியூர்' [630], 'சிவஞானப் பூமித் தேன் புலியூர்' [639], என்றெல்லாம் திருப்பெயர்கள் கொண்டதான ஆகாச ஸ்தலமாம் 'மாந்தருரு வனங்குயில் கொஞ்சிட தேங்கு வாழை கரும்புகள் விஞ்சிடு வான் குலாவு 'சிதம்பர' த்தில் 'தெற்குக் கோபுர வாசலிலும் [621], 'மேலைக் கோபுர வாச'லிலும் [622], 'வடக்குக் கோபுர வாச'லிலும் [626], 'நாலு கோபுர வாசலி'லும் [627], 'வேத நூன்முறை வழுவா மேதினம் வேள்வியால் எழில் புனைமூ வாயிர மேன்மை வேதியர் மிகவே பூசனைபுரி'யவும் [625], 'இனியமுது புலிபாதனுடன் அரவு சதகோடி இருடியர்கள் புக'ழவும் [643], வீற்றிருத்தலும் உண்டு

*பிற முக்கிய ஸ்தலங்கள்

காசி முதல் ராமேச்வரம் வரை

அஃதன்றியும். 'கங்கைப் பதிநதி காசி' [656], 'ஸரஸ்வதி நதி கண் வீறு வயிர விவனம்' [659], 'வட விஜயபுரம்' [விஜயவாடா] [819], 'வெள்ளிகரம்' [661], 'சிவன்மூதூர் தெரிவையர் தா வந் தருநடமாடும் திருவலம்' [669] 'வேலூர்' [670], 'திருவிரிஞ்சை [676], 'திகழ் வேடங் காளியொ டாடிய ஜகதீசங் கேச நடேசுர திருவாலங்காடு' [677], ['வேத புரீசுரர் உறை'] 'திருவேற்கா [685], 'மாசிலாமணி ஈசர்' [687] உறைகின்ற, 'சொல்லு முநிவோ தவம்புரி'யும் 'மருமல்லி மாவனம் நீடிய பொழில் மெல்லி காவ மாடமை வடமுல்லை வாயில்' [686], 'திருவல்லிதாயம்' [689 'திருவளரும் ஆதிபுரி'யாம் [690] 'ஒற்றியுர்' (691), 'கடலக் க திரை அருகேசூழ்' [698] 'அழகும் இலகிய புலமையும் மகிமைய வளமும் உறை திருமயிலை' [695], 'மாகமுற மணிமாளிமாடமுயர் தி வான்மியூர்' [702], 'திருத்தேர் சூழ் மதிள் ஏரார் தூபிகள் அடு கார் மாளிகை யேநீள் ஏருள திருப்போரூர்' [714], 'ஆயிரத் தி நூறு (மெய்த்தமிழ்) (721) மறையோரும் வாழும் உத்தரமேரு [720] 'மதுராந்தக [724] த்து வடதிருச்சிற்றம்பலம்' [722], சே ராம் 'வளவாபுரி' [725], 'கோவ தாமறை யோர் மறை ஓதும் ஓத விழாஒலி கோடி ஆகம மாஒலி மிக வீறும் சோலை மாநக [திருக்கோவலூர்] [738], 'திரள்கமுகிற் றலை இடறிப் பலகதலி குலை சிதறிச் செறியும் வயற் கதிரலையத் திரை மோதித், திமிதி னப் பறையறையப் பெருகு புனற் கெடில நதித் திருவதிகை' [742 'மாது புகழை வளர்க்கும் திருவாரூர்' [744], 'சீத வயல் சுற் நாவல்' [747], 'மகிழ்பெணை யிற்கரை பொழில்முகில் சுற்றி திருவெணெய் நற்பதி' [748], 'அமலைமுன் அரிய தவஞ்செ பாடல வளநகர்' [749], 'வேத்தம தாமறை யார்த்திடு சீர்த் தி வேட்களம்' [752]. 'எனதாய் உறை விருத்தாசலம்' [754 'கூட்டுநதித் தேங்கிய வெளாறு தரளாறு திகழ் நாடு' [திரு கூடலை யாற்றூர்] [760],

---

* இத் தலைப்பிற் குறிக்கப் பெருத, திருப்புகழ் பெற்ற தலங்கள் ப உள. அவை விரிவஞ்சி விடப்புட்டன,

'பொழில் மீதே சங்கு நன்குழிழ் தரளமும் எழில்பெறு துங்க ரண்பணி மணிகளும் வெயில்விடு சண்பையம்பதி' [774] யாழ் 'மழைமுகில் தவழ்தரு மண்டு கோபுர மதிள்வயல் புடையுற விஞ்சு காழி' [768],

'தையல் நாயகிக்கு நன்பாகர்' (785) உறையும், 'பச்சிள பூக பாளை செய்க்கயல் தாவு வேளூர்' [784], 'கூற்று மரித்திடவே உதை பார்வதியார்' [திகழும்] 'கடவூர்' [789], 'எழில் வளை பிக்கத் தவழ்ந்து லாவிய பொனிநதி தெற்கிற் றிகழ்ந்து மேவிய இணையில் இரத்நச் சிகண்டியூர்' [மாயூரம்] [792], 'செழுமலர்ப் பொழிற் குரவம் உற்றபொற் றிருவிடைக் கழி' [798], 'முத்தி அருள் தரு திருவாஞ்சியம்' [816], 'எண்டோளர் காதல் கொடு காதல் கறியே பருகு *செங்காடு' [திருச்செங்காட்டங்குடி] [817], 'அரி பளி விததி முறைமுறை கருதும் ஆரூர்' [824], 'அலர்தரு புட்பத் துண்டாகும் வாசனை திசைதொறும் முப்பத் தெண்காதம் வீசிய அணி பொழிலுக்குச் சஞ்சாரமாம் அளி இசையாலே அழகிய சிக்கல்' [831], 'தனையே இணை நாகை' [834] 'செழுநத்து மிழு முத்து வயலுக்குள் நிறைபெற்ற திகழ் எட்டி குடி' [837] 'எண்கண்' [839], 'குயில் ஆலித்திடு பொழிலே சுற்றிய கூடவாயிற் பதி' [840], 'வேதவனம்' (845), 'நிலவரும்பு தண்டரளமு மிளிர்ஒளிர் பவளமும்பொரும் பழனமும் அழகுற நிழல் குருந்தமும் செறி துறை' [திருப்பெருந்துறை] [849], 'திருத்துருத்தி' (850),' செழுமா மதில் சேர் அழகார் பொழில்சூழ் திருவீழி [மிழலை] [851], 'திருவாவடு துறை' [852], 'நவகங் கைக்கிணை பகர்ந்த மாமணி நதி பங்கிற் குலவு கந்துகாபுரி' [திருப்பந்தணை நல்லூர்] [860], 'பனந்தாள்' [861] 'திரைபொருகரை மோது காவிரி வருபுனல்வயல் வாவி சூழ் தரு திருவிடை மருதூர்' [865], 'அகிலமும் அழியினும் நிலைபெறு திரிபுவனம்' [866], 'கொண்டல் சூழக் கழனி சங்குலா விப்பரவு கும்பகோண'ம்[869], 'சண்ட கோபுரச் செம்பொன் மாளிகைத் தஞ்சை', (888) 'திருவின் மாமர மார்பழனப்பதி, அயிலு சோறவை

* இத் தலத்துத் திருப்புகழ் தான் வள்ளிமலை ஸ்வாமிகளைத் திருப் புகழ்பால் ஈர்த்து ஆட்கொண்டது.

யாளு துறைப்பதி, திசையின் நான்மறை தேடிய முற்கு விதியாதிச் சிரமும் மாநிலம் வீழ்தரு மெய்ப்பதி, பதுமநாயக வாழ்பதி, நெய்ப்பதி, திருவையாறுடன் ஏழு திருப்பதி' [ஸ ஸ்தானம்] [890],

'பஞ்சரம் கொஞ்சுகிளி வந்துவந்தைந்துகர பண்டிதன் த யெனும் வயலூர்'(14), 'குடதிசை வாராழி போலும் படர் காவேரி சூழும் குளிர் வயலூர்'(904), 'அருளிற்சீர் பொய கணபதி திருவக்கீசன் வாழும் வயலி'(910), 'தட்பமுள தட வயலு (917), என்றெல்லாம் புகழப்பெறும் 'சோலை புடைசுற்று வயலூ (915),

'திருவளர் சேலம்'(938), 'திருமுருகன்பூண்டி'(946), 'அவிநா (947), 'விழாமலி திருப்புக்கொளியூர்' (952), 'பேரூர்' (95 'எழுகரை நாடு'(990),

'கனக மிகும்பதி மதுரை வளம்பதி'(962), 'மாமறை முழங் சீபுருடமங்கை' (நாங்குனேரி)(974), 'சோலை வளைந்து சா விளைந்து சூழும் இலஞ்சி'(978), 'கோதிற்பத் தாரொடு மாத சீலச்சித் தாதியர் சூழ்தரு கோலக் குற்றலம்'(980), 'உத் கோசத்தலம்'(986), வீறு பெற்றிலகு ராமேசுரம்'(988) முதலிய த தலங்களிலும், 'சிவதல முழுதும்' (824) (எல்லா சிவஸ்தல களிலும்), 'உலகெங்கும் மேவிய தேவாலயந்'தோறும்(1304) பொ தலுமுண்டு.

பொது இடங்கள்

அஃதன்றியும், 'மாசில் அடியார்கள் வாழ்கின்ற ஊர்'களிலு (93), 'பெரிய மட'த்திலும்(827), 'சோமநாதன் மட'த்திலும்(82 'கொந்து வார் குரவடியினும்'(289), 'நெல்லிமரத்' தடியிலும்(66 'நெறி பல கொண்ட வேத நன் முடியினும்'(289), 'தொண் கூட்டத்'திலும்(373), 'அடியவர் சிந்தை வாரிஜ நடுவினும்'(28 'கவிசை வரு சேவகன் இதய'த்திலும்(119), 'மெய்ப்போதத் உற்றுர் சித்தத்'திலும் (ஞானிகள் சித்தத்திலும்) (1120), 'நற்கா சேவிப்பார் சித்தத்'திலும்(1125), 'துணர்விரி கடம்பமென் தொ

லும், பம்புறும் புழுகும் அசலம் பசுஞ் சந்தனம் குங்குமம் தொகு களபமும் துதைந் தென்றும் நன்கொன்று பத்திரு தோளும் தொலை வில் ஷண்முகங்களும் தந்த்ர மந்த்ரங்களும் பழநி மலையும் பரங் குன்றமும், செந்திலும் துதிசெயுமெய் அன்பர் தம் சிந்தை'யிலும் (926), 'குஹன் என்பவர் மனதினிலும்'(775), 'மருவும் அடியார்கள் மனதி'லும்(418), 'குற்றமற்றவர் உளத்தி'லும்(1294), 'திகழுற்றிடு யோகதவ மிகு முக்கிய மாதவர்கள் இதயத்திட'மும்(691), 'பலகலை படித்தோது பாவாணர் நாவி'லும்(149), 'அடல்மிகு கடதட விகடித மதகளி றநவரதமும் அகலா மாந்தர்கள் சிந்தையி' லும்(வகு. 2) உறைதலும் உரியன்.

நீ சென்று அவனைக் கண்டு வழிபட்டு அவனுடைய 'மயிலையும், அவன் திருக்கை அயிலையும், அவன் கடைக்கண் இயலையும் நினைந் திருக்க'(வகு. 17)

அலைகடல் வளைந்து டுத்த எழுபுவி புரந்தி ருக்கும்
அரசென நிரந்த ரிக்க வாழலாம்-
அளகைஅர சன் தனக்கும் அமரர்அர சன்த னக்கும்
அரசென அறம் செலுத்தி ஆளலாம்-
அடைபெறுவ தென்று முத்தி அதிமதுர செந்த மிழ்க்கும்
அருள்பெற நினைந்து ஸித்தி ஆகலாம்-
அதிரவரும் என்று முட்ட அலகில்வினை சண்டை நிற்க
அடலெதிர் புரிந்து வெற்றி ஆகலாம்;
இலகிய நலம்செய் புஷ்ப கமும்உட னிறம் வெளுத்த
இபஅர செனும் பொருப்பும் ஏறலாம்-
இருவர்அவர் நின்றி டத்தும் எவர்எவர் இருந்தி டத்தும்
ஒருவன்இவன் என்று ணர்ச்சி கூடலாம்-
எமபடர் தொடர்ந்தழைக்கில் அவருடன் எதிர்ந்துள் உட்க
இடிஎன முழங்கி வெற்றி பேசலாம்'(வகு. 17)

இஃதெல்லாம் யான் அறிந்தபடியே கூறினேன். இனி யான் சொன்ன இடங்களிலே யாயினும், பிற இடங்களிலேயாயினும் 'முடிமேலே அஞ்சலி செய்வோர்கள் நேயக்கார'னும்(41), அச் சேயைக் காணுமளவில், மலர்ந்த முகத்துடன் கைகளைத் தலைமேல்

கூப்பி 'இந்தச் சடமுடன் உயிர் நிலைபெற, [அவனது] நளின பொற் கழலிணைகளில் மரு மலர் கொடு, (உன்) சித்தமும் மனம் உருகி நல் சுருதியின் முறையோடே சந்தித்து, "ஹர ஹர சிவசிவ சரண்"என கும்பிட்டு, இணையடி அவை [உன] தலைமிசை தங்கப் புளகிதம் எழ, இருவிழி புனல் குதி பாய'[210],

அகிலாகம வித்தக![929], அடியார் காவற்கார! [166], ஆருதார [574], இமகோத்திரி கையில் ஆயி ரமிக்கும் மைந்தா![அந். 34], உக்ரவீர![107] என்றும் இளையோய்![50], கடம்பின் மலர் மாலை மார்ப![அலங். 19] கல்வி கரைகண்ட புலவ![320], சரவண ஸம்பவ [933] ஞாந பண்டித ஸ்வாமீ![100], தீர ஸம்ப்ரம வீரா![100], நிருத நிட்டூரா![வகு. 16] ப்ரதாப வித்யாதரா![வகு. 16] முத்தமிழ் விநோத![385], வீரமாது மருவிய ஈராறு தோள![350], ஸத்ய வாக்யப் பெருமாளே![383] எனக் கூறி எதிர்முகமாக ஏத்திப் பின்னர் அச் சேயின் திருவடிகள் உன் தலையிலே உறும்படி தெண்டனிட்டு வணங்கி,

அமரேச![223], ஆண்மைக்கார![41], உத்தண்ட தேவ குமார [123], உமை மைந்த! [அந். காப்பு], கங்கை செல்வ![அந். 44], கந்தரி சிந்துரை பாக![அந். 39], குறிஞ்சிக் கிழவ![அலங். 5], சேயே![14] தேவ நாயக![88], நிதியே! நித்தியமே![927], முழுச் சேவக![வகு. 13] ராக விநோத![அந். 98], வானவர்க்கு மேலான தேவ! [அலங்.90] விப்ரர்க் காதர! [984], வேலாயுதப் பெருமாளே! [349] என்று யானறிந்து நினக்குக் கூறியவாறும் பின்னும் பல வாருகவும் கூறிப் புகழ்ந்து 'நின்னை அளந்து அறிதல் மன்னுயிர்க்கு அரிது. நின் திருவடியைப் பெற வேண்டுமென்று நினைத்து வந்தேன். நின்னோடு ஒப்பாரில்லாத மெய்ஞ் ஞானத்தை உடையோய்' என்று சொல்லி நீ கருதிய வீடு பேற்றினை நீ விண்ணப்பம் செய் வதற்கு முன்னே,

ஆண்டவன் அருகில் சுக ஸொரூப பதவியைப் பெற்றுத் திருப்புகழ் பாடிக் கொண்டிருக்கும் ஸ்ரீ அருணகிரிநாதர் உன்னை நோக்கி, 'இந்தா மயில் வாஹநர் சீட்டு இது'(330) எனக் கூறிச் சிவநீறு தந்து, பின் அச் சேயை நோக்கி,

"ஓதரிய மோந ஞாநாங்குர![வகு. 16] இவன் நினது 'சித்ர கவித்துவ சத்த மிகுத்த திருப்புகழை'[384] வாழ்த்தி வந்துள்ளான். இவன் உனது திருவருளைப் பெறத்தக்கவன்" என்று பரிந்துரை கூறுவர்.

அது கேட்டு, 'சோலை வளர் வெற்பிலுறை முத்தர் புகழ் தம்பிரான்'[439] உன் மீது கருணை வைத்துத் தெய்வ மணம் கமழும் தனது

'எழுதரிய அறுமுகமும் மணிநுதலும் வயிரம் இடை
யிட்டுச் சமைந்தசெஞ் சுட்டிக் கலன்களும் துங்கநீள் பன்-
னிருகருணை விழிமலரும் இலகுபதி னிருகுழையும்
ரத்நக் குதம்பையும் பத்மக் கரங்களும் செம்பொன் நூலும்;
மொழிபுகழும் உடைமணியும் அரைவடமும் அடியிணையும்
முத்தச் சதங்கையும் சித்ரச் சிகண்டியும் செங்கைவேலும்–

முழுதும் அழகிய'[1277] இளவடிவைக் காட்டி, நீ நமக்கு 'உகந்த மனிதன், நமது அன்பன்'[70] என்றுரைத்து, 'அன்புற உபதேசப் பொருளூட்டி மந்திர தவஞாநக் கடல் ஆட்டி'[814], "நீ வீடு பெற நினைத்துவந்த வரவை யாம் முன்னரே அறிவோம். அஃது எய்தற் கரிதென்று அஞ்சற்க" எனத் திருவாய் மலர்ந்து கூறிப், பிறராற் பெறுதற்கரிய 'ஆறுறையும் நீத்ததன் மேல்நிலை'[அநு. 47] யாகிய பரமாநந்த வீடு பேற்றைத் தந்தருளுவர்; உடன் சென்று வணங்கி உய்தி பெறுக.

[இதழ்-6-திருப்புகழ்த் தேவன் ஆற்றுப்படை முற்றும்]

உ

கணபதி துணை

திருத்தணிகேசன் துணை

இதழ்—7

மனது—அறிவு தர்க்கம் (1)

அர்ப்பணம்

'முழுக்க அடிமைப்பட' (*1250), 'யாம்ஓதிய கல்வியும் எம் அறிவும் தாமே பெற...தந்ததனுல்' (†அநு.17), 'உரையையும், அறி வையும் உயிரையும் உணர்வையும் உன் பாத கஞ்சமலர் மீதே புனைதர(370) மனது-அறிவு தர்க்கம் எனும் இந் நூல் 'உகந்து மன மும் குளிர்ந்து'[1167] அர்ப்பணம்.

1. விநாயகர் துதி

மனது : பெரிய யானை ஒன்று வருகிறதே! யார் அது?

அறிவு : அது சாதாரண யானை யன்று. அவர் 'குஞ்சர மாமுக விக்கிநப் ப்ரபு. அங்குச பாசகரப் ப்ரஸித்தன். ஓர் கொம் பன். மஹோதரன். முக்கண் விக்ரம கணராஜன். கும்பிடு வார் வினை பற்றறுப்பவன். எங்கள் விநாயகன். நக்கர் பெற்றருள் குன்றைய ரூபக கற்பகப் பிளை' (495).

ம : ஓஹோ! தொந்திக் கணபதியா! (151)

அ : ஆம், 'முப்புரம் எரி செய்த அச்சிவன் உறை ரதம் அச்சது பொடி செய்த அதிதீரன்; அக்குறமகளுடன் அச்சிறு முருகனை அக்கணம் மணம் அருள்பெருமாள். (விநாயகர் துதி 1)

ம : அப்பன் தேரை உடைத்தவன் பொல்லாதவன் அல்லவா?

அ: பொல்லாதவனு! இல்லை! இல்லை! 'அன்பர் தமக்கான நிலைப் பொருளோன்' (வி. து. 2) ஆயிற்றே.

ம : ஆமாம். அவருக்கு ஒருவர் அன்பர் ஆவது எப்படி?

அ : 'கைத்தல நிறைகனி அப்பமொ டவல் பொரி'யும் (வி.து. 1) 'இக்கு அவரை நற்கனிகள் சர்க்கரை பருப்புடன் நெய், எள்

---

* வெறும் எண் வ. த. சுப்ரமண்ய பிள்ளையவர்கள் பதிப்பின் திருப்புகழ் எண். † அநு-கந்தரநுபூதி.

பொரி அவல் துவரை இளநீர் வண்டு எச்சில் பயறு அப்ப வகை பச்சரிசி பிட்டு வெ[ள்]ளரிப்பழம் இடிப்பல் வகை, தனிமூலம் மிக்க அடிசில், கடலை' முதலிய எல்லாம் நிவேதனம் செய்ய வேண்டும் [வி. து. 3]

ம : இன்னும் என்ன செய்ய வேண்டும்?

அ : 'மருவு மலர்புனை தொத்திர சொற்கொடு வளர்கை குழை பிடி தொப்பண குட்டொடு வனஜ பரிபுர பொற்பத அர்ச்சனை' [வி. து. 5] செய்து பணிய வேண்டும்.

ம : எதற்காக யானை முகத்தனைக் கும்பிடுவது?

அ : 'மதம் பிடித்த யானையின் நிலையில் நீ இருக்கிறாய் என்பதை விநாயகருடைய யானை முகமும், உன்னை அடக்கி நல்வழியில் செலுத்துவதற்கு நான் ' [அங்குசம் போல்] இருக்கிறேன், என் சொல்படி நீ நடக்க வேண்டும்' என்பதை அவரிடமுள்ள அங்குசமும் சுட்டிக் காட்டுகின்றன. இந்த உண்மையை நீ உணர்ந்து எந்த நாளும் நடக்க வேண்டியே நீ விநாயகரை வழிபடுதல் வேண்டும், புரிந்ததா?

ம : சரி, அப்படியே செய்கின்றேன்.

2. குரு ஸ்துதி

ம : நான் நிம்மதி அடைவது எப்படி?

அ : 'அல்லும் பகலும் இல்லாச் சூதானது அற்ற வெளிக்கே ஒளித்துச் சும்மா இருக்கப் போதாய் இனி மனமே' [*அலங். 17.]

ம : என்ன! 'நூறுகோடி துன்பம் நொடிமீதிலே நினை'[1270]க்கும் நான் சும்மா இருக்க முடியுமா? முடியாதே! 'ஓடுங் கருத்தை'[அலங். 68] உடையவன் அல்லவா நான்! அதற்கு வழி?

அ : 'சரணகமலாலயத்தை அரை நிமிஷ நேர மட்டில் தவமுறை தியானம் வைத்தால்' [214] ஓடும் கருத்தை நிறுத்தலாம். 'அறிவினில் எளிது பெறல் என மறைபறை யறைவதொர் உதய மரணம் இல் பொருளினை'[511] அடையலாம்.

ம : சரண கமலம் கோயிலாகுமா? யாருடைய சரணம் கோயில்?

அ : 'ஞான உபதேசம் 1அக்கற வாய் பேசும் சத்குருநாதர் அற்புத சீர் பாத'மே [950] கோயில்.

ம : அப்படி என்றால்?

* அலங். – கந்தரலங்காரம். 1. அக்கு – பாசத்தின் உரிமை.

அ : (உன்னிடமுள்ள) பாசத்தின் உரிமையெல்லாம் அற்றுப் போகும்படியாக ஞானோபதேச மொழியை வாய்மலர்ந்தரு ளும் குருநாதரின் அற்புதமான திருவடிகளே நீ லயித்திருக் கக்கூடிய கோயிலாகும்.

ம : சத்குருவா தெய்வம்? அவர் பாதமா கோயில்?

அ : ஆம். சத்குரு கடவுளுடன் 'ஏகபோகமாய் நீயும்நானுமாய்' (862), 'நானே நீயாய் நீயே நானாய்'(1041), 'நீ வேறு எனு திருக்க நான்வேறு எனுதிருக்க'(220) என்றபடி இரண்டறக் கலந்துநிற்பதால் 'எனது யானும் வேருகி எவரும் யாதும்யான் ஆகும் இதய பாவனு தீதத்தில்'(1048) 'யாவுமாய் மனம் கடந்த மோன வீ'ட்டில்(739) 'உரையற்று, உணர்வற்று, உடலற்று, உயிரற்று, உபாயமற்றுக் கரையற்று இருளற்று, எனதற்று, இருப்பவர் (அலங். 61). அவரே ஸர்வாந்தர்யாமி, ஸர்வ வியாபகர், ஸர்வ வல்லபரென்பது 'பரமகுருவாய் அணுவில் அசைவாய்' என்பதாலும் 'ஒளிக்கும் ஒளியென வெளிக்கும் வெளியென, உயிர்க்கும் உயிரென' (*வகு. 5) என் பதாலும் விளங்கும். அவர் திருவடிதான் கோயில். புரிந்ததா?

ம : சரி. குருவுக்கு 'வேண்டியது என்றும், வேண்டாதது என்றும்' இருக்குமே! அது மனித சுபாவம் ஆயிற்றே!

அ : அப்படியல்ல. அவர் 'ஸகலமும் பற்றிப் பற்றற நிற்கும் பொருள்'(462). ஒரு நிலையில் 'உருவாய் அருவாய் உளதாய் இலதாய் மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க் கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்' 'குருவா'(யும்) வருவார் என்னும் பாடலை(†அநு. 81) இன்றுவது தெரிந்து கொள்.

ம : நான் தெரிந்து கொள்ள வேண்டியது அவ்வளவுதானே?

அ : இன்னமும் உளது. 'உருவன்று, அருவன்று, உளதன்று இல தன்று, இருளன்று, ஒளியன்று, என நின்றதுவே' குரு (அநு. 12). அதாவது குரு, ஞான சொரூபம், இந்த ஞான சொரூபமே கடவுள். முருகப் பெருமான் திருவுருவமே தன் உள்ளத்தில் குரு வடிவில் வந்து குடிகொண்டதாகக்கூறுகிறார்.

*வகு.—திருவகுப்பு. †அநு.—கந்தரநுபூதி.

அருணகிரியார். தெரிந்துகொள்.

ம : நீ விளக்கும் குரு எனக்கு என்ன செய்ய இயலும்?

அ : குரு 'நற் றிருப்புகழ்ப் ப்ரபுத்துவக் கவித்துவக் குருத்துவத்துப் பணித்து' (958), உன்னை 'ஆட்கொளல் ஜகமறியும்படி காட்டி' (331), 'வழி வழி அடிமை எனும் உரிமை' '(வகு. 1) யையும் 'அழியா வர'த்தையும் (834) தந்தருளுவார்.

ம : அருள் பெறுவது சுலபமாகத் தான் இருக்கும்போல் இருக் கிறது!

அ : அப்படியா! இல்லை இல்லை, அது சிரமமானதுதான்! அதற்கு எளிய முறையொன்று இருக்குமானால் அது

'தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானம்என்றும்
இடுங்கோள் இருந்த படிஇருங் கோள்எழு பாரும்உய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றம் திறக்கத் தொளைக்கவைவேல்
விடுங்கோன் அருள்வந்து தானே உமக்கு வெளிப்படுமே'

(அலங். 16). என்ற வாக்கின்படி நடந்து கொள்வதுதான். அதனால் இவ்வாறு செய்தால் குருவருள் உன்னிடம் தானே வந்து சேரும்.

ம : இதுவா எளிய முறை! நன்றுகச் சொன்னாய்! இது மிகச் சிரமமானது அல்லவோ! ஆயினும் நீ எனக்கு உறுதுணையாக இருப்பதால் முயன்று பார்க்கிறேன்.

3. திருப்புகழ் - அருள் ஞானம்

ம : 'அருள்' என்பது என்ன?

அ : 'யான் எனது அற்றிடு போதம்' [1291] கிடைக்கப் பெறுவதே அருள்.

ம : அருள் எப்படிக் கிடைக்கும்?

அ : திருப்புகழ் படிக்க வேண்டும். இது 'கருணைச் சுத்தச் சித்தித் தமிழ்' [475]. 'அத்தத்து இக்கு என நிற்கும் பொருள் தொறும் பொத்தப் பட்டதொர் அத்தம்' [454] என்பதால் அர்த்தத்திலேயே கரும்புபோல் இனித்து நிற்கும் குணம் அமையச் செய்யுள் தோறும் அர்த்தம் பொதிந்துள்ள செல்வம். தவிர இது 'கரையறும் சித்ரச் சொல் புகழ்' [462] [எல்லையில்லாத அழகிய சொற்களாலாகிய புகழ்நூல்]

'தேன் ஊறும் வாசாமகோசர, நாம அற்புதத் திருப்புகழ்' [1132] 'இடக்கு அடக்கு மெய்ப் பொருள் திருப்புகழ்' [253] என்பதால் இது மந்திர சொரூபமான அநுபவ ஞான ஜீவ கலை. அருள் ஞாநியாகிய மஹான் ஸ்ரீ *சேஷாத்ரி ஸ்வாமி கள் திருப்புகழை மஹா மந்த்ரம் என்றும் அருளியுள்ளார்.

ம : மந்திரம் என்றால் என்ன? அது எப்படி இருக்கும்?

அ : மனமே! சொல்லுகிறேன். கவனமாகக் கேள். 'மதிய மண் குண' எனத் தொடங்கும் திருப்புகழில் வரும் 'நகர, 'மகர' 'சிகர', 'வகர' 'யகர' [652] என்பன பஞ்சாட்சர மந்திரத்தை உணர்த்தும். இதன் உண்மை 'உபநிட மதுர கவிதை' [1007] என்பதனாலும், 'அந்தித்த மந்த்ரமென அறையு மறை யென அருந் தத்துவங்களென அணுவி லணுவென' [157] என்பதனாலும் விளங்கும். கூர்ந்து கவனித்தால் அநேக மஹா மந்த்ரங்களையும் பொருளையும் திருப்புகழிலிருந்தே உண ரலாம்.

ம : இவ் வுண்மைகளில் எதுவும் அருணகிரிநாதரின் பிற நூல் களில் இல்லையா? திருப்புகழில் மாத்திரந்தான் இருக்கிறதா?

அ : சரியான கேள்வியை எழுப்பி விட்டாய். அதற்கும் நான் விடை சொல்லுகிறேன் கேள். தேவேந்த்ர சங்க வகுப்பே 'ஷோடசாட்சரி' என்ற மஹா மந்திரமாகிய ஸ்ரீ வித்தை இதை அறிபவர், திருப்புகழ் மஹிமையை அறியலாம். ஆனால் 'அருள்கொண் டறியார் அறியும் தரமோ' [அநு. 13] என் படி 'மன வாக்குச் செயலாலே அடைதற் கரிதாய் அரு உருவாகி ஒன்றுபோலே இருக்கும் பொருளை எவ்வாறு புக வது?' [அலங். 28]. அருளை அருளால்தான் அடைய முடி யும். அடியார்களொடு கூடினால் அருள் பெறும் வழியை அறிய லாம். தொண்டரொடு கூடும் நாளே சிறந்த நாள். இதையே 'வழிபாடு உறுவாரொடு அருளாதர மாயிடு மக நாள்' [699] என்று கூறியுள்ளார்.

---

* குழுமணி நாராயண சாஸ்த்ரிகள் இயற்றிய சேஷாத் ஸ்வாமிகள் சரிதம்-பக்கம் 173.

ம : இவ்வளவும் எதற்குப் பயன்? இவற்றை எல்லாம் தெரிந்து கொண்டு ஆவதென்ன?

அ : 'அகிலமும் இன்புற்றிருக்க' வேண்டும் என்றபடி 'எந்தத் திசையினும் மலையினும் உவரியின் எந்தப்படியினும் முகடினும் உள பல எந்தச் சடலமும் உயிர் இயை பிறவியின் உழல்'தல் [210] ஆகாது என்ற, 'கருணைமகிழ்ந்து ஓதுங்கலை' [1091] ஆன, 'பக்தர்கள் அற்புதமென ஓதும் சித்ர கவித்துவ சத்த மிகுத்த' [384] 'அரிய பெரிய திருப்புக'ழை (354) 'உரைப்பவர்கள் படிப் பவர்கள், மிடிப்பகைமை செயித்தருளு'வர் [173].

ம : இத் திருப்புகழை முன்னர் யாராவது பாடிப் பயனடைந்துள் ளார்களா?

அ : ஆம், அதுவும் தெரிந்துகொள்ள வேண்டியதுதான். திருப் புகழ் என்ற சொல் பழமையானது. அருணகிரிநாதருக்கும் முற்பட்ட காலத்தது. இது சூரஸம்ஹார காலத்தில் பூத வேதாளங்கள் பாடிய ஆதி திருப்புகழ் என்பது 'திருப்புகழ் எடுப்பன முடிப்பன' [1250], 'கள முழுதும் வாழிய திருப் புகழ் முழக்குவன' [வகு. 6] 'அலகையுடன் பூதம் பல கவிதம் பாடும்' [1090] என்பனவற்ருல் விளங்கும். இத்தகு பழம் புக ழையே நமக்கு அருணகிரிநாதர் உயிர்ப்பளித்து அருளி யுள்ளார்.

ம : திருப்புகழ் படிப்பதன் பயன் முழுமையும் சொல்லி முடிந் ததா?

அ : அது சொல்லி முடியும் தரத்தது அன்று. இந்தப் 'புகழ் பலத் திணைத் தரவேணும்' [798] என்றும், 'திருப்புகழை உற்றுத் துதிக்கும் வகை'யே [906] 'அபரிமித சிவ அறிவு' [906] என்றும் விளக்கியிருக்கிருர் அதன் ஆசிரியர். மேலும் 'சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்கும் செகுத்தவர் உயிர்க்கும் சினமாகச் சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக் கும் திருப்புகழ் நெருப்பு' [263] என்பதனுல் நம்மிடம் உள்ள காம க்ரோத லோப மோஹ மத மாத்ஸர்யாதிகள் ஒடுங்கி ஈசன் அருள் சுரக்கும் என்பதும் தெளிவாகின்றது. எவ்வளவு மகத்தானது இத் திருப்புகழ் என்பது தெரிந்ததா?

ம : ஏதோ ஓரளவு தெரிந்து கொண்டேன். ஆமாம்! உனக்குத் திருப்புகழ் எவ்விடம் கிடைத்தது?

அ : 'அடைக்கலப் பொருளாமென நாயனை அழைத்து, "முத்தியு தாம் அநுபூதியென் அருள் திருப்புகழ் ஓதுக" என்று 'வேல் மயில் அரு'ளினர் [850] குரு.

ம : ஏன் திருப்புகழ் படிக்க வேணும்? இதிகாசம், புராணம் சாஸ்திரம் எல்லாம் படித்தால் போதாதா?

அ : ஆம். இது தெரிந்துகொள்ள வேண்டியதுதான். உற்றுக் கவனித்தால் இந் நூற் கருத்துகள் அனைத்துமேயன்றி இன்னும் பல கருத்துகளும்கூடத் திருப்புகழிலேயே இருப்பது வெளிப் படை. உதாரணமாகச் 'சதுர்மறையின் முதல், நடு, முடிவு [வகு.1] என்பதால் வேதசாரமும், 'ஆரண ஆகமங் கடந்தகலை [739] என்பதால் சகல கலைகளையும் மீறிய பொருளும், 'சுருதி முடி மோனம் சொல் சிற்பரம ஞான சிவ சமய வடிவாய் வந்த அத்துவிதம்' [149] என்பதால் வேத சாஸ்திர சமய ரகஸ்யங்களும் திருப்புகழிலிருக்கும் உண்மையும் திருப் புகழில் இல்லாதது வேறொன்றிலும் இல்லை என்பதும் வெளிப் படும்.

ம : திருப்புகழின் உயர்ந்த தன்மையை மேலும் தெரிந்துகொள் ளத் துடிக்கிறேன், சொல். கேட்டுக் கொள்ளுகிறேன்.

அ : திருப்புகழ் அருள் வாக்கு. ஆகையால் இதற்கு அர்த்தம் கூறுவது எளிதல்ல. ஆதலால்தான் 'உனது காவிய நூலாராய்வேன் இடர்படா தருள்' [150] என்று இறைஞ்சுவ தும் தவிர 'அருள்கொண் டறியார் அறியுந் தரமோ' [அநு. 13] என்றும் விளக்குகிறார் அருணகிரியார். 'நான் மறை உபநிட'தம் [749] ஆன திருப்புகழாக 'ஒருதிரு மரகத துங்கமாமிசை அறுமுகம் ஒளிவிட' [749] வந்த முருகன் புக ழை விளக்கினர். திருப்புகழே 'அறமும் அறந்தோயும் அறி வும்' [1090] எனும் செல்வம். இது 'முறைப்படு மறைத்திர ளறியாத முதற்பொருள் புலப்பட உணர்த்தும் [1250] கலை.

4. உலகாசாரம்

ம : 'உடுக்கத் துகில் வேணும், நீள்பசி அவிக்கக் கனபானம் வேணும், நல் ஒளிக்குப் புனலாடை வேணும் மெய் உற

நோயை ஒழிக்கப் பரிகாரம் வேணும், உள் இருக்கச் சிறு நாரிவேணும், ஓர் படுக்கத் தனி வீடு வேணும்.'(420) இப்படி என் ஆசைக்கு அளவே இல்லை.

அ : சிறு நாரியா வேண்டும்? சுருதி என்ன சொல்லுகிறது தெரியுமா?

ம : தெரியுமே! 'சுருள் அளக பார கொங்கை மகளிர் வசமாய் இசைந்து சுரத க்ரியையால் விளங்கு மதனாலே சுருதி'(141) ஆகையால் 'கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே சேர' (அநு. 24) வேண்டும் எனும் போதே அவர்கள் சாயலும் நிலையும் என்னை மயக்குகிறதே!

அ : அது 'மயலோது மந்த நிலை' (490) அல்லவா!

ம : அவள் மொழி 'பால் மொழி' யாயிற்றே!

அ : 'அன்று. 'மால்தரு வஞ்ச வசை பேசுகின்ற மொழி' (490)

ம : நுதலோ!

அ : 'மதிபோலு கின்ற விழிசேரும் அந்திமதி நேருகின்ற நுதல்' (490)

ம : 'விழியோ'!

அ : 'அயிலே நிகர்த்த விழி' 'விழையும் மனிதரையும் முநிவரையும் அவர் உயிர்துணிய வெட்டிப் பிளந்து உளம் பிட்டுப் பறிந்திடும்' [1277].

ம : முநிவருக்குமா இந்த ஆசை இருக்கும்?

அ : ஆசையற்ற 'முநிவரும் மனவலி கரைய'(921) 'உருகிட விரகிற் பார்வை' [943] உடையவர்கள் அழகிய மகளிர்.

ம : 'கண்டுண்ட சொல்லியர் மெல்லியர் காமக் கலவிக் கள்ளை மொண்டுண்டு அயர்ந்தால் [அலங். 37] தானே தாபந்தீரும்.

அ : இந்த விரகதாபம் அடங்க 'மனத்ரோகிகள்'[801] வசமாய் இசைவதை விட்டுக் 'கந்தா' என்றேத்தினால் அத் தாபம் தீரும். 'இந்த்ரிய தாப சபலமற"[501] வேணும். 'மோக மாமாயை'[769] 'மயக்கக் கடல்'[420] 'அநுராக மஹா உததி'யில் [1140] மூழ்கினால் 'உயிர் அவமே போம்'[420] ஜாக்கிரதை.

ம : மாதரைத்தான் நினையாதே என்கிறாய். ஆனால் ஜம்பமாக 'ஜக ஜம்பக் குடைசூழ் சிவிகை மெல், மதஇன்பத் துடனே பல பணி தனிதம் பட்டுடை யோடு இகல் முரசொலி வீணை

தவளந்தப் புடனே கிடுகிடு நடை தம்பட்ட மிடோல் பல ஒ
சதளம் பொற்றடி காரரும் இவை புடை சூழ வெகு கும்ப
துடனே பலபடை கரகம் சுற்றிடவே வர, இசை வெகு சம்ப
துடனே அழகுடன்' [640] இதமாய் வரவேணும். மேலு
'தோரணகனக வாசலில் முழவு தோல் முரசு அதிர முதிர
தோகையர் கவரி வீச, வயிரியர் தோள்வலி புகழ, மத கே
வாரண ரத பதாகினி துரக மாதிரம் நிறைய அரசாகி வா
வேணும் [1250].

அ : இவை 'விருமம்' எனும் 'ப்ரமை'[பிராந்தி] [640]. 'ஆவி சா
யாக்கி[1033], 'நொடி மறையும் பொய்ப் பவுஷு', [6
அரசாகி 'இனிது இறுமாந்து வாழும் இருவினை நீண்ட காய
ஒரு பிடி சாம்பலாகி விடும்'[778]. 'உறங்கி விழிப்ப
பிறந்த பிறப்பு [865] இது. நினைவில் வை.

ம : இவற்றை எல்லாம் நினைத்துக் கொண்டே தனித்திருந்த
கல்யாணம் செய்து கொண்டு பெண், பிள்ளைகள் பிற
வேண்டாமா?

அ : ஐயோ! அதில் என்ன சுகமிருக்கிறது? உண்மையா
கலவிச் சுகம் யாது எனச் சொல்லுகிறேன், நன்ருய்க் கே
'சிவஞான புண்டரிக மலர் மாதுடன் கலவி, சிவபே
மன்பருக அறியாமல் ஜகமீது உழன்று மல வடிவாய் இரு
பொது திகழ் மாதர் பின் செறுமி அழி'யாதே(1240)

ம : எனக்கு இவ்வளவு புத்தி சொல்லியும் 'மின்னே நி
வாழ்வை' [அநு. 27] யான் விரும்புவது என்னே!

அ : 'விதியின் பயன் இங்கு இதுவே[அநு. 27] 'அநுபவம் இ
சற்றும் விடவோ இயலாது இயலாது' [1140] 'இருள
துன்ப மருள் மாயை' என்னும் 'அவியுறு சுடர்'[862] இது.

ம : நீ சொல்லும் அந்த இருள் 'எப்படிப் போகும்?

அ : 'மின்னும் கதிர் வேல்' ஆயுதத்தை [அநு. 49] நினைத்த
போய்விடும்.

ம : வேல் எப்படி மின்னும்?

அ : 'உலாவுதய பானு சதகோடி உருவான ஒளி'யுள்ள [207]
கதபக்ஷ குலத் துரகத் திவாகரர் வடிவை உருக்கி வடி
திருக்கை வேல்'[வகு. 6] என்பது உனக்குத் தெரியாதா?

ம : அந்த வேலைக் காணக் கண் கூசும் போல் இருக்கிறதே' அ
வேல் எங்கு எப்படி இருக்கிறது?

அ: 'மோக அந்தகாரம் தீர்க்க, வேதாந்த தீபங் காட்டும்' [1257] சுடராக 'ஞானகர சுர பாஸ்கர'னிடம் (அநு. 49) இருக்கிறது.

ம: அந்தப் பாஸ்கரன் எங்கிருப்பான்?

அ: உன் நிலத்தைச் சீர் படுத்தினல் அவன் வெளிப்படுவான். 'எழுபிறவி நீர் நிலத்தில் இரு வினைகள் வேர் பிடித்து இடர் முளைகளே முளைத்து வளர்மரயை எனும் உலவையே பணைத்து விரக குழையே குழைத்து இருள் இலைகளே தழைத்து மிக நீளும் இழவு நனையே பிடித்து மரண பழமே பழுத்து இடியும் உடல்'[1100] இது 'இறந்திட்டுப் பெறவே கதியாயினும் இருந்திட்டுப் பெறவே மதியாயினும் இரண்டிற்றக்கதொர் ஊதியம் நீ தர இசைவாயே'[631] என்று துதிக்க வேணும்.

ம: துதித்த வண்ணமே இருப்பின் உடல் நோய் வாய்ப்பட்டால் வைத்தியம் செய்ய வேணுமே! துதிப்பதற்கும் உடல் நலம் அவசியமாயிற்றே! சுவரை வைத்துக் கொண்டல்லவா சித்திரம் எழுத வேண்டும்?

அ: நன்று. நோயற்ற வாழ்வுதான் இறைவழிபாட்டுக்கும் அவசியமானது. 'பவரோக வைத்திய நாதப் பெருமாள்[293], 'போந்த பக்தர் பொலா நோய் போயிட வேண்டு அநுக்ரக போதன், [892] 'யார் வேண்டினும் கேட்ட பொருளீயும் த்யாகாங்க சீலன்'[1257], 'துதி செயும் சுத்தப் பக்தியர் துக்கங் களை'ந்து [451] 'வேலெடுத்த சமர்த்தை உரைப்பவர் ஏவருக்கும் மனத்தில் நினைப்பவை அருள்வோன்'[499] ஆன முருகப்பெருமான் நோயற்ற வாழ்வை நிச்சயம் அளிப்பான்.

ம: ஆமாம். 'சமர்த்து' என்று சொல்லுவதால் 'அசடு' என்பதும் ஒன்று உண்டோ?

அ: ஆகா! இருக்கிறதே. ஆனல் வேலெடுத்தவனிடம் இல்லாத பொருள் அசட்டுத்தனம் ஒன்றுதான். 'அசட்டு வெறு வழி வழக்கர்' [வகு. 15] இருக்கிறார்கள். இவர்களை அணுகாமல் 'வேண்டிய போதடியர் வேண்டிய போகமது வேண்ட வெறுதுதவும் பெருமாளை'[247] யாசி.

ம: அவனே யாசகனாயிற்றே! அவனிடமா நான் யாசகம் கேட்பது?

அ: அந்தப் ப்ரபுவா யாசகன்? யாரிடம் யாசகன் கேட்டான்?

ம : 'மரகத மணிப்பணியின் அணிதழை உடுத்துலவும் வனசர கொடிச்சிதனை யாசிக்கும் யாசகன்'(வகு. 12) அல்லவா? இது தெரியாதவன் போல் என்னைக் கேட்கிறாயே?

அ : அதுதான் எனக்குத் தெரியுமே! அவன் கேட்ட யாசகமே ஒரு தனிப்பட்டது. யாரிடம் எதை யாசித்தான் தெரியுமா? 'போக பூமிபுரக்கும் த்யாக மோக குறப் பெண்'(1034) ஜகன் மாதா இச்சா சக்தியாம் வள்ளிப் பிராட்டியாரல்லவா? அவள் போக பூமியையே தியாகம் செய்தாள். உலகம் உய்ய அதை அந்தப் ப்ரபு அவளிடம் யாசித்தான்.

ம : அவரைத் துதிக்க, யாசிக்க நல்ல ந ள் பார்க்கலாமா?

அ : 'நாள் என் செயும்' [அலங். 38].

ம : முந்தை வினை தொலைய வேணுமே.

அ : 'வினைதான் என் செயும்? [அலங். 38] இருவினை மாத்திரமல்ல 'குல வினை (ஜன்ம ஜன்மாந்தரங்களில் குலத்தோர் செய்த வினைகள்)களையும்' [531] 'சிந்தை தீ நெறியிற் சேறலைத் தாறலைத் தீர்க்கும் குமரன் திரியவினைச் சேறலைத் தாறலை' (அந். 86) ப்பானு?

ம : நவக்ரகப் ப்ரீதி செய்யவேணுமே!

அ : உனை 'நாடி வந்த கோள் என் செயும்' (அலங். 38) முருகனைத் துதிசெய் போதும். 'செந்திற் சேய! ..நிசாச ராந்தக! சேந்த! என்னில் 'சேயவன் புந்தி பனிப்பாநு வெள்ளி பொன் செங் கதிரோன் சேயவன் புந்தி தடுமாறவே தரும் சேதமின்றே' [அந் 48].

ம : யமனுக்காவது பயப்பட வேண்டாமா?

அ : 'கொடுங் கூற்று என் செயும்'?(அலங். 38) 'ஞானச் சுடர்வடி வாள்கண்டாயடா! அந்தகா! வந்து பார்!சற்றென் கைக்கெட்ட வே'[அலங். 25] என அவனை விரட்டுவேன்.

ம : எப்படி அவ்வளவு தைரியம்?

அ : 'குமரேசர் இருதாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் ஷண்முகமும், தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே' [அலங். 102] தைரியத்துக்குக் குறைவு ஏது?

ம : தைர்யம் வர என்ன செய்ய வேண்டும்?

அ : 'தடுங்கோள் மநத்தை....இருந்தபடி இருங்கோள்'[அலங். 16].

ம : அப்படி இருந்தால்?

அ : அருள் வந்து தானே வெளிப்படும் [அலங். 16].

ம : அதுவாக வருமா? நாம் நினைக்க வேண்டாமா?

அ : "போக்கும், வரவும், இரவும், பகலும்,...வாக்கும், வடிவும், முடிவும் இல்லாது ஒன்று வந்து வந்து தாக்கும் மநோலயம் தானே தரும், எனைத் தன்வசத்தே ஆக்கும், [அலங். 73]. 'மயில் வாஹநர் சீட்டு' என்று ஒன்றிருக்கிறது. அதைப் பெற்று வந்தால், அதுவே கதி. ஆட்சி பெற......மைந்தா! குமரா! எனும் ஆர்ப்பு உ[ய்]ய மறவாதே!"

ம : மறவாதிருக்க, மார்க்கம் என்ன?

அ : திருப்புகழாதிய ஞாந நூல்களைப் பயின்று, பகவந் நாம ஸ்மரணம் செய்யக் கற்றுக் கொண்டால் இறைவனை மறக்காதிருக்கலாம் [330].

ம : அப்படியானால் நான் படிக்கிறேன்.

அ யாரிடம்?

ம : வாத்யாரிடம் தான் கேட்டுக் கொண்டு புத்தகங்களைப் படிக்க வேண்டும்; சாஸ்த்ரங்களைக் கற்க வேண்டும்.

அ : 'கரவாகிய கல்வியுளார்' (அநு 45), 'பொருள் சற்றறியாத அவலக் கவலைச் சவலைக்'[796] 'கலையே பதறிக் கதறித் தலையூடலை' [அநு. 32] 'பல சவலைக் கலை தேடி ஒருபயனைத் தெளியாத' வர்கள் [800], 'கலைஞரெனும் கற்புக் கலியுக பந்தத்துக் கடன பயம் பட்டுக் கசடாகும் கரும சடங்கச்சட் ஸமயிகள் பங்கிட்டுக் கலகலெனுங் கொட்புற் றுடன்மோதும் அலகில் பெருந் தர்க்கப் பலகலையின் பற்' [955] றுடையவர்கள். இவர்களிடமெல்லாம் சென்று கற்றுக் கொண்டுவிடமுடியாது. அந்தப்பரம் பொருள் 'வாசித்துக் காணொணாதது' [343], 'காணொணாதது உருவோடருவது பேசொணாதது உரையே தருவது' (741).

ம : அப்படியானால் செலவு செய்து விசேஷ பூஜை செய்கிறேன்.

அ : அது 'பூஜித்துக் கூடொணாதது' [343] ஆயிற்றே!'

ம : பின் என்ன தான் செய்ய முடியும்? அதைப் பற்றிப் பேசுவேன்.

அ : அது 'வாய்விட்டுப் பேசொணாதது' [343] ஆயிற்றே! எப்படி அதைச் சொல்ல உன்னால் இயலும்?

8

ம : பின், எப்படித்தான் தோன்றும் அது?

அ: "நெஞ்சினுலே மாசர்க்குத் தோன்ருததுʼʼ

ம இல்லாவிட்டால் மந்த்ர ஜெபம் யந்த்ர பூஜை செய்கிறேன்.

அ : 'மந்த்ரப்ரஸ்த்தார தரிசந யந்த்ரத்துக் கேள்வி அலம்அலம்' [போதும்; போதும்] [945], 'ஆராதநர் ஆடம்பரத்தும் மாருது ஜபாலம்பநத்தும் ஆவாஹந மாமந்திரத்தும்....வேதாகமம் ஓதுந் தலத்தும் மருளாதே" [1130].

ம : அப்படியாளுல் தவம் செய்கிறேன்.

அ : தவம் என்பது என்ன தெரியுமா? 'அன்பின் நிலையான(து)' மாதவம் [அலங்.51] 'கமையற்ற சீர்கேடர் வெகுதர்க்க கோலாலர் கருமத்தின்மாயாது கொண்டுபூணும் ஸமயத்தர் ஆசார நியமத்தின் மாயாது ஸகளத்துளே நாளும் நண்பு ளோர் செய்,சரியைக் க்ரியாயோக நியமத்தின் மாயாது சலனப்படா ஞாந' [911]த்தில் கருத்து இருத்த வேண்டும். மாநஸிக ஞாந பூஜை செய்ய வேண்டும்.

ம : ஞாந பூஜை செய்ய மாலை கட்ட வேண்டாமா?

அ : 'மநோ பத்மமான பூ வைத்து நடுவே அன்பான நூலிட்டு நாவிலே சித்ரமாகவே கட்டி', மாலை சாத்த வேண்டும். [1211]

ம : அந்தப் பூ என்ன வாஸனை? எப்படி இருக்கும்?

அ : 'ஞாந வாஸம் வீசி ப்ரகாசியா நிற்ப மாசிலோர் புத்தி அளி பாடும்.......மாலை' (1211).

ம : அது என்ன பூமாலை?

அ : என்னைக் க்ருதார்த்தனுக்கும் 'மாக்ருதா புஷ்ப மாலை'. அதைச் 'கோல ப்ரவாள பாதத்தில் அணி'ய வேண்டும் (1211).

ம வீடு, வாசல், பெண்பிள்ளை எல்லாரையும் கவனிக்க வேண்டாமா? ஆசை என்பது இருக்கிறதே!

அ : 'சிந்தாகுல இல்லொடு செல்வமெனும் விந்தாடவி' இந்த வாழ்வு (அநு. 33); 'சிதறி அலைந்து போவது செயலாசை' (658). ஆகையால் 'சுட்டது போலாசை' [1115] விட வேண்டும். 'இது வேண்டும் அது வேண்டும்' என்பதை விட்டு, 'வேண்டாமை' ஒன்றை அடைந்து உளம் மீண்டு ஆறி (முருகன்) சரணங் களில் வீழ்ந்து ஆவல் கொண்டு உருகு அன்பினை உடையோ ஞய் வேந்தா கடம்பு புனைந்தருள் சேந்தா சரண் சரண் என் பது வீண்போம தொன்றல' (1187).

ம : உலகத்துக்கு ஒட்டாது ஒழுகுவதில் ஊருக்குப் பயப்பட வேண்டாமா? ஊரார் ஏச மாட்டார்களா?

அ : 'விருதா வினிலே உலகாயத மேவி'டுவது (834) உலகா சார துக்கம்; 'இதில் உளம் வேறு (1041) பட்டுத் தாள் பாடுஆண்மைத் திறல்' (1043) பெற வேணும்.

ம : இது துக்கமென்றால் எது ஸுகம்?

அ : 'மனதாசை மாசினை அறுத்தால்' 'ஞாநமுது' (915) பருகலாம். இதுதான் ஞாந ஸுகம்.

5. ஞாந ஸுகம்

ம : ஞாந ஸுகம் என்பது விளங்க வில்லையே!

அ: 'ஞாந ஸுகம்' என்பது பற்றி மேலும் பல அரிய விஷயங்கள் தெரிந்து கொள். "அருள் ஞாநிகள் ஸுகம்" [841], 'நாவில் இன்பக் குமுளி' (593) யில் விளையும் தித்தித்திருக்கும் சிவ அமுது. நாவின்ப ரஸமதான ஆநந்த அருவி' [179]; முக்தர் ஹ்ருதயா கமல மதனில் விளையா நின்ற அற்புத-ஸுபோத (ஸ்வாநுபூதி) ஸுகம்' [148]. ஏக போகமாய் நீயும் நானுமாய் இறுகும் வகை (யே) பரமஸுகம்' [862].

ம : அதன் ருசி எப்படி இருக்கும்?

அ : அது சொல்லித் தெரிவதல்ல; ருசித்துத் தெரிந்து கொள்ள வேண்டியது. இதனையே 'அறிபவர் அறியும் இன்பம்' [1127], 'கரும்புந் துவர்த்துச் செந்தேனும் புளித்தறக் கைக்கும்', அரும்புந் தனிப் பரமாநந்த (ஸாகரம்)[அலங் 6] 'தேனுந்து முக்கனிகள் பால்செங் கருப்பிளநிர் சீரும் பழித்த சிவம்' [239] என்பர்.

ம : ஸாதாரண அருவி,மலையில் உதித்து நிலங்களில் பாய்ந்து ஓடி ஸமுத்ரத்தில் கலக்கும். இந்த அருவிக்கு அவையும் உள்ளனவா?

அ : அவையெல்லாம் ஸாதாரண அருவிக்கே இருக்குமே. இந்த ஆநந்த அருவிக்கு இருக்காதா? இந்த அருவி, 'புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவநமெற்றித் தத்திக் கரை புரளும்' [அலங். 47]. அருவி பாய இன்னமுதம் ஊறும். 'உயர் ஞாந பூதரத் துச்சியின் மேல் அளியில் விளையும் ஆநந்தத் தேன் எனப்பெறும் [அலங். 8]. 'கசிவார் இதயத்து அமிர்தே' [929], பரமாநந்த ஸாகரம். இதைப் பருக, 'மாயா விநோத

மநோதுக்கமானது மாயும். அது ஞாந விநோதம் [அலங். 46]. 'வாசகம் பிறவாதோர் ஞாந ஸுகோதய(மே) வேதாவேத மும் நாடி நின்றதொர் மாயாதீத மநோலயம்' [705] தரும் மநோதீத சிவஸொரூபம். [497]

ம : நீ விவரிப்பதிலிருந்தே எனக்கு நாக்கில் ஜலம் ஊறுகிறதே! அதன் வடிவும் உண்மையும் என்ன?

அ : 'மநோபாவத்துக் கரிதாய மவுந பூரித ஸத்ய வடிவு(481). உரைமாண்டு செயல் மாண்டு சித்தம் அவிழ்ந்து நித்யத் வம்' பெற்ற 'ஜீவன் சிவச் சொருபம்' [239] சிவஞாநம் கை கூடினால் இதை அறியலாம்.

ம : சிவஞாநம் என்பது என்ன?

அ : 'சிகர மருந்த வாழ்வது சிவஞாநம்' (658). 'ஓல மறைகள் அறைகின்ற ஒன்று அது. மேலே வெளியில் ஒளிரும் பரஞ்சுடர். ஓது சரியை க்ரியையும் புணர்ந்தவர் எவராலும் ஓத அரிய துரியங் கடந்தது போத அருவ ஸுருபம் ப்ரபஞ்சமும் ஊனும் உயிரும் முழுதுங் கலந்தது சிவஞாநம்.: இது 'பரமஸுக மெய் வீடு' [501] 'சிவமாதுடனே அநுபோகமானால் சிவஞாநமுதே பசியாறலாம். (563)

ம : இந்த அமுது பசியாற என்ன யோகம் செய்ய வேணும்?

அ : 'சிவயோகம் என்னும் குருத்தை மனத்தில் இருத்து' என்பது (அலங்.71) சிவயோக தயாபரனாகிய குருநாதன் சொன்ன கருத்து. "ஐந்து பூதமும் ஆறு ஸமயமும், மந்த்ர வேத புராண கலைகளும்...வெகுரூப அண்டராதி சராசரமும் உயர் புண்டரீ கனும், மேக நிறவனும், அந்திபோல் உருவானும் நிலவொடு வெயில்காலும் சந்த்ர ஸூரியர் தாமும் அஜபையும் விந்து நாதமும் ஏகவடிவம். அதன் ஸொரூபமதாக உறைவது சிவ யோகம் (357). 'இது பரமாய் இருக்கும் அதீதம்' (அலங். 68). இதனால் கிடைப்பது 'அவிரோத ஞாநச் சுடர்வடிவாள்' (அலங். 25) 'நிகரில் பஞ்ச பூதமும், நினைவும், நெஞ்சும், ஆவி யும் நெகிழ வந்து நேர்படும் 'அவிரோதம்' (674). அந்த அவி ரோதத்தால் 'உள்ளுருக நாடும்படிபேசி, உள்ளதும், இலாதும் அல்லது அவிரோத உல்லஸ விநோதம்' (667) காணலாம்.

6. வாழி

ம : இதோடு முடிந்து விடுகிறதா?

அ : ஆம், முடிகிறது. முன்சொன்ன சிவயோக ஸாதனைக்கு உதவும் ஆறுமுகப் பெருமானை வாழ்த்துவோம். அவன், 'வாழியென நித்தம் மறவாது பரவிற் சரண வாரிஜம் அளிக்கும் உபகாரக்காரன்' (வகுப்பு 4).

ம : 'அழியாவரம்' (834) தரக் கூடிய (அப்) ப்ரபுவை நாம் 'வாழி' யென ஆசி கூறுவதா? அல்லது அவன் நம்மை ஆசி கூறுவதா?

அ : 'நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை' என்பது நீ அறிந்ததே! அதன்படி அவன் வாழ வேண்டுமென நாம் அவனை வாழ்த்தினால் அதனால் நாம் வாழ்வோம்.

ம : அதனால் என்ன செய்ய வேண்டும்?

அ : "வாழ்வாய்! நீ மயில்வாஹநனே" (அநு. 31) என்போம். [மனதும் அறிவும் ஒன்று சேர்ந்து முருகப் பெருமானை வாழ்த்தி நற்கதி பெறுகின்றன.]

[ஸத்குருநாதர் திருவடிகளே சரணம்]

[இதழ்—7—மனது—அறிவு தர்க்கம் (1) முற்றும்.]

*மனது—அறிவு தர்க்கம் (2)

(தேவகாந்தாரி ராகத்தில் பாடவும்)

மனம் : 'விடமும் அமுதமும் மிளிர்வன இணைவிழி வநஜம்' அது வநஜம்.

அறிவு: 'விடமும் அமுதமும் மிளிர்வன இணைவிழி வநஜம்' அல்லவே, விழி வநஜம் அல்லவே.

ம : மற்று அது எதுவோ? விழி எதுவோ?

அ: 'விடமும் அமுதமும் மிளிர்வன இணைவிழி வநஜம(ல்)ல தழல் முழுகிய சர'மே, செந் தழல் முழுகிய சரமே.

---

*'விடமும் அமுதமும்' எனத் தொடங்கும் திருப்புகழ், [516 ஆம்] பாடலிலிருந்து இந்தத் தர்க்கம் ஸ்வாமிகளால் தொகுக்கப் பட்டுள்ளது. மேலும் 41, 330, 348 ஆம் பாடல் அடிகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

ம . ஸரிஸரி ஸரிஸரி ஸரியே அது ஸரியே.
அ: மற்றதைச் சொல்வாய்! (உன்) அநுபவம் விள்வாய்!
ம : 'விரைசெய் ம்ருகமத அளகமும் முகிலே' கரு முகிலே.
அ 'விரைசெய் ம்ருகமத அளகமும் முகில'ல்லவே, அது முகிலல்லவே.
ம : மற்று அது எதுவோ? அளகம் எதுவோ?
அ: 'ஞாந விழியின் வழிகெட இருள்வதொர் இருளே' காரிருளே.
ம : ஸரிஸரி ஸரிஸரி ஸரியே அது ஸரியே.
அ: மற்றதைச் சொல்வாய்! (உன்) அநுபவம் விள்வாய்.
ம : 'மொழியும் அமுதம்' (மகளிர்) மொழியும் அமுதம்.
அ: மொழியும் அமுதம் அல்லவே, மொழி அமுதம் அல்லவே.
ம : மற்று அது எதுவோ? மொழி எதுவோ?
அ: 'மொழியும் அமுதல உயிர்கவர் வலை'யே (உன், உயிர்கவர் வலையே.
ம : ஸரிஸரி ஸரிஸரி ஸரியே அது ஸரியே.
அ: மற்றதைச் சொல்வாய்! [உன்] அநுபவம் விள்வாய்!
ம : 'விழையும் இளநகை தள'வே நகை தளவே.
அ: 'விழையும் இளநகை தளவ[ல்]லவே; நகை தளவ[ல்]லவே.
ம : மற்று அது எதுவோ? நகை எதுவோ?
அ: 'விழையும் இளநகை தளவல கள'வே பொய்க் களவே.
ம : ஸரிஸரி ஸரிஸரி ஸரியே அது ஸரியே.
அ: மற்றதைச் சொல்வாய்! (உன்) அநுபவம் விள்வாய்!
ம : 'வியன்நாபித் தடமும் மடு'வே காம மடுவே.
அ: 'வியன்நாபித் தடமும் மடுவ(ல்)ல'வே, தடம் மடுவல்லவே.
ம : மற்று அது எதுவோ? மடு எதுவோ?
அ: 'வியன்நாபித் தடமும் மடுவல படுகுழி'யே உன்னை வீழ்த்தும் படுகுழியே.
ம : ஸரிஸரி ஸரிஸரி ஸரியே அது ஸரியே.
அ: மற்றதைச் சொல்வாய்! உன்) அநுபவம் விள்வாய்!
ம : 'இடை துடி'யே மகளிர் இடை துடியே.
அ: 'இடை துடி'யல்லவே துடி அல்லவே,
ம : மற்று அது எதுவோ? இடை எதுவோ?

அ: 'இடை துடியுமல மதன் உரு'வே, மன்மதன் உருவே.
ம: ஸரிஸரி ஸரிஸரி ஸரியே அது ஸரியே.
அ: மற்றதைச் சொல்வாய்! (உன்) அநுபவம் விள்வாய்!
ம: 'வனமுலை சயிலம்', முலை சயிலம்.
அ: 'வனமுலை சயிலம் அ(ல்)ல'வே, சயிலம் அல்லவே.
ம: மற்று அது எதுவோ? முலை எதுவோ?
அ: 'வனமுலை சயிலம(ல்)ல கொலை எமனே', உன்னைக் கொல்ல வந்த எமனே.
ம: ஸரிஸரி ஸரிஸரி ஸரியே அது ஸரியே.
அ: மற்றதைச் சொல்வாய்! (உன்) அநுபவம் விள்வாய்!
ம: 'முலைமிசை புரள் கோவை தரள மணி'யே, ரத்ந மணியே.
அ: 'முலைமிசை புரள் கோவை தரள மணி அ(ல்)ல'வே, தரள மணி அ(ல்)லவே.
ம: மற்று அது எதுவோ? மணி எதுவோ?
அ: 'கோவை தரள மணியல எமன்விடு கயி'றே, பாசக் கயிறே.
ம: ஸரிஸரி ஸரிஸரி ஸரியே அது ஸரியே.
அ: மற்றதைச் சொல்வாய்![உன்] அநுபவம் விள்வாய்!
ம: மகளிர் மகளிர் மகளிர் நல்ல மகளிர்.
அ: 'மகளிர் மகளிரும் அ[ல்]ல'வே, மகளிர் அல்லவே.
ம: மற்று அவர் எவரோ? மகளிர் எவரோ?
அ: 'மகளிர் மகளிரும் அ[ல்]ல பல வினைகொடு சமையும் உரு'வே, மாயை உருவே.
ம: ஸரிஸரி ஸரிஸரி ஸரியே அது ஸரியே.
அ: உணர்வொடு புணர்வகை அறிவாய், நன்மை பெறுவாய்.
ம: உணர்வொடு புணர்வதெப் படியோ? அழிவுறு யாக்கையை நம்பிய அடியேன், எதற்கும் அஞ்சியே மங்கிடும் மிடியேன், உணர்வொடு புணர்வதெப் படியோ?
அ: அஞ்சுதல் தவிர்த்திடு மனமே, இனிநம தாக்கையை நம்பாதே
ம: அஞ்சுதல் தவிர்க்கஎன் செய்வேன்? எங்கு செல்வேன்?
அ: 'அஞ்சா தமையா கிரி யாக்கையை பஞ்சாடிய வேலவ ஞர்க்கியல் அங்காகுவம் வாஇனி தாக்கையை ஒழியாமல்', வேலவ ஞர்க்கியல் அங்காகுவம் வா [330].
ம: வேலவ ஞரெனை ஆள்வரோ? அருள் தந் தாள்வரோ?
அ: மயில் வாஹநர் சீட்டினைப் பெறுவாய். முருகனால் ஆட்கொள்ளப் பெறுவாய் நீ. அதற்கிந்தா மயில் வாஹநர் சீட்டு.

ம : எது மயில் வாஹநர் சீட்டு? அதை இந்த எளியேற்குக் காட்டு

அ: 'வந்தானுவம் நாம் என வீக்கிய சிவநீறு', வன 'மயில் வாஹநர் சீட்டு', திருப்புகழும் புன மயில் வாஹநர் சீட்டே.

ம : ஸரிஸரி ஸரிஸரி ஸரியே அது ஸரியே.

அ: வந்தோம் வந்தோம் வந்தோம், உலகினில் நாம் தான் வந்தோம்?

ம : எதற்கிந்த உலகினில் வந்தோம்? இங்கு வந்தோம்?

அ திருப்புகழ் பாடவே வந்தோம், பாடிச் சிவஸுதன் தனைத் தொழ வந்தோம்.

[மனமும் அறிவும் சேர்ந்து முருகனைத் தொழுது திருப்புகழ் பாடிக் கொண்டிருக்கையில் கந்தவேள் வருகிறார்]

அ வந்தார் வந்தார் வந்தார் மால்மருகன் இங்கு வந்தார்.

ம : எவ்வண்ணம்ஈண்டவர்வந்தார்? ஏழையை ஆளவோ வந்தார்?

அ: நம்மையாட் கொள்ளவே வந்தார், நர்த்தநம் ஆடியே வந்தார்.

'திந்திதிமி தோதி தீதித் தீதி
தந்ததன தான தானத் தான
செஞ்செணகு சேகு தாளத் தோடு நடமாடும்
செஞ்சிறிய கால்வி சாலத் தோகை
துங்கஅநு கூல பார்வைத் தீர
செம்பொன்மயில் மீதிலே' [41] [இப்போது வந்தார்]
'திக்குமுகி லாடஅரி ஆடஅயன் ஆடசிவன்
ஒத்துவினை யாடபரை ஆடவரர் ஆடபல
திக்கஸுரர் வாடஸுரர் பாடமறை பாடஎதிர் களமீதே—
எத்திசையும் நாடியம ஞர்நிணமொ டாடபெல
மிக்கநரி ஆடகழு தாடகொடி ஆடஸமர்
எற்றிவரு பூதகணம் ஆடஒளி ஆடவிடு வடிவேலர்'[348]
வந்தார் வந்தார் வந்தார் நம்மையாட் கொள்ளவே வந்தார்.

[மனமும் அறிவும் முருகனைத் தர்சித்து மகிழ்கின்றன]

ம : சிறப்புறு புதிதனாய் ஆனேன், இன்று நான் திருப்புகழ் அடியவனானேன்.

அ: மனமே நன்கு நீ வாழ்வாய்! என்றும் திருப்புகழ் ஓதியே வாழ்வாய்!

[மனமும் அறிவும் முருகனை வாழ்த்தி அமைதி பெறுகின்றன]

[இதழ்—7—மனது—அறிவு தர்க்கம் (2) முற்றும்]

விற்பனைக்குரிய புத்தகங்கள்

	விலை	ரூ.	கா
சேய்த்தொண்டர் (புராணம் முருகனடியார்கள் வரலாறு—பாடல்கள்)		8	00
தேவியும் அருணகிரியாரும் [ஆராய்ச்சி நூல்]		5	00
திருத்தணித் திருவீதிகை அருட்புகழ்		3	50
காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸந்நிதிமுறை		1	00
திருப்பழன ஸ்தல புராண வசநம்		1	00
அருணகிரிநாத ஸ்வாமிகள் தோத்திர மஞ்ஜரி		0	75
அருட்புகழ் (நாகை முதலிய தலப் பாடல்கள்)		0	75
நங்கை நல்லூர் அருட்புகழ்—1		0	50
உழலூர் அருட்புகழ்		0	50
செங்கற்பட்டு அருட்புகழ்		0	40
மாயூரம் அருட்புகழ்		0	30
வள்ளிமலை அருட்புகழ்		0	30
ஸ்ரீ ராஜராஜேச்வரி பூஜா விதாநச் சுருக்கம்		0	25
சேலம்-அழகுநிலம் அருட்புகழ்		0	25
திருமுருகன் ஹரஹரோஹராக் கும்மி [108]		0	25
பார்வதி தேவி போற்றி அகவல்		0	25
வைஷ்ணவி அருட்புகழ்த் திரட்டு		0	20
இருடியர்பட்டி அருட்புகழ்		0	15
காமாக்ஷியம்மை நவமணிமாலை		0	10
பாகசாலை அருட்புகழ்		(அச்சில்	
நங்கைநல்லூர் அருட்புகழ்—2		(அச்சில்	
கட்டுரைக் கதம்பம்		அச்சில்	

நூறாவது ஜயந்தி விழா வெளியீடுகள்

மலர் 1.	மார்கழித் திருப்புகழ்ப் பாராயணத் திருமுறை	0	50
,, 2.	திருப்புகழ்ப் பாராயணத் தவநெறித் திருமுறை	1	50
,, 3.	ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் சரித்ரம் (தமிழ்)	0	75
	,, ,, ,, (ஆங்கிலம்)	0	75
,, 4.	பாகம்-I வள்ளிமலை ஸ்வாமிகளின் தொகுப்பு)	1	00
,,	,, II வள்ளி கல்யாணம் ,,	1	50
,, 5.	வள்ளிமலை வள்ளல் (ஸ்வாமிகளின் சரித்ரம்)	5	00
,, 6.	ஷண்முக ஷட் ஸஹஸ்ர நாமாவளி	(அச்சில்	
,, 7.	வேல்மயில் பூஜா விதி	0	25
,, 8.	தேவேந்த்ர ஸங்க வகுப்புகள்	0	25
	நூறாவது ஆண்டு ஜயந்தி விழாச் சிறப்பு மலர்	5	00

கிடைக்குமிடம் :

அருளிசை. ஸு. வே. ஸுப்ரம்மண்யம்,
ஸ்ரீ வைஷ்ணவி இல்லம், மனை 36, 39 ஆம் தெரு,
நங்கைநல்லூர், சென்னை-61.

ஸ்ரீ வைஷ்ணவி ஆலய ஸந்மார்க்க ஸங்க

வெளியீடுகளும் பிறவும்

விலை	ரூ.	காசு
Sri Vaishnavi Shrine (English)	3	00
Pearls of Wisdom (English)	3	00
Swami in Kanchi (English)	1	50
ஸ்ரீ வைஷ்ணவி ஸந்நிதி முறை தொகுதி–1	1	00
,, ,, ,, ,, 2	3	00
மநோந்மணி பூஜை ஷோடச விருத்தம்	0	25
ஸ்ரீ வைஷ்ணவி துதிப்பா மஞ்ஜரி	0	30
ஸ்ரீ வைஷ்ணவி பூஜா கல்பம் (Sanskrit)	2	00
ஸ்ரீ வைஷ்ணவி ஸுப்ரபாதம் (ஸம்ஸ்க்ருதம்-தமிழ்)	0	50
ஸ்ரீ வைஷ்ணவி அருட்புகழ்த் திரட்டு (ஸ்ரீ வள்ளிமலைத் திருப்புகழ் ஸ்வாமிகளால் ப்ரதிஷ்டை செய்யப்பெற்ற)	0	20
ஸ்ரீ வைஷ்ணவி தேவியின் புகைப்படம் Size 1	1	50
,, ,, ,, ,, 2	3	00
,, ,, ,, ,, 3	4	50
,, ,, ,, ,, 4	12	00
,, ,, டாலர் (வெள்ளி)	6	00
,, ,, டாலர் (தங்கமுலாம்)	12	00
,, ,, ,, எனுமல்	15	00
,, ,, மூவண்ணப் படம்	0	50
,, ,, அபிஷேகத் தைலம் (1 oz)	1	50
வாத நிவாரணத் தைலம் (1 oz)	1	50

கிடைக்குமிடம் :-

ஸ்ரீ ஸாது பார்த்தஸாரதி,

ஸ்ரீ வைஷ்ணவி ஆலயம்,

வடதிருமுல்லைவாயில், சென்னை–62.



தண்ணளி சுரக்கும் ஸச்சிதா நந்தா



ஜதிவாத்ய நிபுணர்
வள்ளிமலை வள்ளல்



" பக்தித் திருமுகம் ஆறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கும் அமுது கண்டேன் "

– அருணகிரியார் (கந்தரலங்காரம்)